விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
(C-2941)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 16 சனிக்கிழமை (30.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 193

## தமிழர்களின் பிரச்சினை தொடர்பில்
# ஜனாதிபதி இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்!
### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு

**(கிளிநொச்சி) தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இதய சுத்தியுடன் செயற்படத்தயாரா? எனவும் முடிந்தால் செய்து காட்டுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சவால் விடுத்துள்ளார்.**

பெரியபரந்தனில் இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்தினால் உருவாக்கப்பட்ட நெற்களஞ்சியத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எம்மண்ணின் விவசாயிகளால் அறுவடை செய்யும் 23



## மயக்கமடைந்து விபத்துக்குள்ளான எட்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேலை தேடிச்சென்ற போது மயக்கமடைந்து விபத்துக்குள்ளான எட்டு பிள்ளைக 24

## சிறுமி படுகொலை மேலும் இருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

மாணவி சிவனேஸ்வரன் றெஜினா படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 24

## விபத்துக்குள்ளான இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் பள்ளத்தினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளான இளைஞர் ஒருவர் இரு வாரங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்திய 23

## முல்லையில் ஓர் குடும்பம் 9 பிள்ளைகளுடன் உணவு தவிர்ப்பில்



23

## பதவி நீக்கம் செய்யப்பட்ட டெனீஸ்வரனுக்கு மீண்டும் அமைச்சு பதவி உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பதவிநீக்கம் செய்யப்பட்ட டெனீஸ்வரனுக்கு மீண்டும் அவர் வகித்த அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது பதவி நீக்கம் தொடர்பாக டெனீஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்த நிலையில், அந்த மனு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே குறித்த தீர்ப்பை நீதியரசர்களான குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஜகத் டி சில்வா உள்ளிட்ட நீதிபதிகள் குழாம் 24

## சர்வதேசத்தை நம்பியே வீதியில் போராடுகின்றோம்
### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(பனிக்கன்குளம்)

சர்வதேசத்தை நம்பியே வீதியில் இறங்கி போராடுகின்றோம் என முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று 480-வது நாளாக போராட்டம் நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக தமது உறவுகளை மீட்பதற்காக கூடாரம் அமைத்து கடந்த வருடம் மார்ச் மாதம் 8-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 480-வது நாளாகவும் இடம்பெற்று வருகிறது

தற்போது ஜெனிவா 24

## தமிழீழ வரைபடத்துடன் உலா வந்த கண்ணகை அம்மன்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்தில் தமிழீழ வரைபடத்துடன் நேற்றைய தினம் அம்பாள் வீதி உலா வந்துள்ளார்.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் நேற்றையதினம் பூங்காவன திருவிழா 23



## ஆதரவு கிடைக்கவில்லை என காட்டுப்புல மக்கள் வருத்தம்
### முறையான அறிவித்தல் இல்லை என தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் காட்டுப்புலத்தை சேர்ந்த மாணவி றெஜினாவின் படுகொலைக்கு நீதி கோரியும் வடக்கில் போதைப்பொருள் பாவனையை தடுக்க வலியுறுத்தியும் நேற்று வடக்கில் பகுதிநேர கடையடைப்பும் பகிஷ்கரிப்பும் முன்னெடுக்குமாறு காட்டுப்புலம் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால் சுழிபுரத்தை தவிர வேறு எந்த பகுதிகளிலும் கடையடைப்போ பகிஷ்கரிப்போ முன்னெடுக்கப்படவில்லை. தமது கோரிக்கைக்கு எந்த தரப்பினரும் ஆதரவு வழங்கவில்லை என காட்டுப்புலம் மக்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். சுழிபுரம் காட்டுப்புலத்தில் மாணவி ஒருவர் கடந்த 25-ம் திகதி திங்கட்கிழமை படுகொலை செய்யப்பட்டிருந்தார். 23

## 500-வது நாளை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் ஆரம்பித்து நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் 500-வது நாளை எட்டியுள்ளது.

இந்த நாளை முன்னிட்டு ஞாயிற்று கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த போராட்டத்தில் பொது அமைப்புக்கள் சமூக 23

## 138 ரூபாயினால் சமையல் எரிவாயு விலை குறைப்பு

(கொழும்பு)

சமையல்எரிவாயு விலை நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு தொடக்கம் குறைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு விலை 138 இனால் குறைக்க 23

## தீர்ப்பு முழுமையாக கிடைத்த பின் மேன்முறையீடு குறித்து முடிவு எடுக்கப்படும் - விக்னேஸ்வரன்

(கொழும்பு)

டெனீஸ்வரனை பதவியிலிருந்து நீக்கிய முதலமைச்சரின் உத்தரவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

மேற்குறித்த தீர்ப்பின் முழுமையான விபரம் கிடைத்தவுடன் இடைக்கால தடைக்கு 23



# விடுதலைப்புலிகளின் வெடிமருந்துகள் தேடி, தோண்டியதில் ஏமாற்றம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட இரணைப்பாலை பகுதியில் விடுதலைப்புலிகளால் வெடிமருந்துகள் புதைத்துவைத்துள்ளதாக நம்பப்படும் இடம் ஒன்றில் நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் அமைந்துள்ள சென்அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் ஒருபகுதியில் விடுதலைப்புலிகளின் வெடிமருந்துகள் புதைத்து வைத்துள்ளதாக இரகசிய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நேற்று 11.30 மணியளவில் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சுமார் ஒன்றரை மணிநேரம் தோண்டப்பட்டபோது எதுவித பொருட்களும் கிடைக்காத நிலையில் பகல் 1.00மணியளவில் தோண்டும் நடவடிக்கை நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. (ம-281)

## மெகா பவர்

திகதி 246
சீட்டிழுப்பு இலக்கம் 29/06/2018
F 02 06 32 52 79

## தன நிதானய

திகதி 2018-06-29
சீட்டிழுப்பு இலக்கம் 16
I 20 35 47 57

## கொவிசெத

திகதி 2018.06.29
சீட்டிழுப்பு இலக்கம் 1805
V 06 52 70 77

## மஹஜன சம்பத

திகதி 2018/06/29
சீட்டிழுப்பு இலக்கம் 3691
R 9 1 6 5 1 0

## அறிவித்தல்
## இனியவாழ்வு இல்லம்

இனிய வாழ்வு இல்லத்தில் பயனாளியாக இருந்து கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் நலன்கருதி

**"இனிய வாழ்வு இல்ல பழைய மாணவர் சங்கம்"** எனும் பெயரில் ஒரு அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது. இந்த அமைப்பு இனியவாழ்வு இல்லத்தின் அனுசரணையுடன், இல்ல தலைமைத்துவத் தின் கீழ் செயற்படுவதாகவே இருக்கும். எனவே இந்த அமைப்பில் 1997ஆம் ஆண்டில் இருந்து வெளியேறிய அனைவரும் இணைந்து கொள்ள முடியும்.

இதில் இணைய ஆர்வம் உள்ளவர்கள் இல்ல அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்று உங்கள் விண்ணப்பத்தினை 31.07.2018இக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**ந.தசரதராஜகுமாரன்**
**கௌரவ செயலாளர்**

(4734)

## மரண அறிவித்தல்



**செல்லையா**
**தம்பிப்பிள்ளை**

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் அரசாங்க அச்சகம், 6ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் யாழ்.வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா தம்பிப்பிள்ளை 28.06.2018 இல் இறைபதமடைந்து விட்டார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.14, யாழ்பாடி வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம். 0212229546

தகவல்:திருமதி
த.பரமேஸ்வரி
(மனைவி)

(473)

## மரண அறிவித்தல்



# சரஸ்வதி அம்மா நாகராஜா

**பிறப்பு:-22.11.1941**
**இறப்பு:-29.06.2018**

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் பூநகரி ஜெயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா சரஸ்வதி அம்மா நேற்று (29.06.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருந்தவம், சோமசுந்தரம், யோகரத்தினம், தர்மரத்தினம், இராமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நடராஜமுதலி, சிவாஜினி, சசிகுமார் (கனடா), சசிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலக்ஷ்மி, முருகமூர்த்தி (ஆசிரியர்-கிளி/கரியாலை நாகபடுவான் இல.02, அ.த.க பாடசாலை), தர்மினி (கனடா), நந்தகுமார் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுஷன், புவிசன், பர்மிலன், பிரியங்கா, டினுஷன், கவிப்பிரியன், யதுர்ஷன், தேனுர்ஷன், லக்ஷிகா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பல்லவராயன் கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26,
மாதிரிக்கிராமம்,
பல்லவராயன்கட்டு.

தகவல்:-குடும்பத்தினர்
0778538684,
0776748612, 0771664977,
0773719462, 0771734088

(4739)

# படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி றெஜினாவுக்கு நீதிகோரி சங்கானையில் பேரணி





(படங்கள்: பொ.சோபிகா)


(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் காட்டுப்புலத்தை சேர்ந்த பாடசாலை மாணவி றெஜினாவின் படுகொலைக்கு நீதி கோரியும் வடக்கில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க வலியுறுத்தியும் நேற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சுழிபுரம் சந்தியில் நேற்றுக் காலை ஆரம்பித்த கண்டனப் பேரணி சங்கானை பிரதேச செயலகம் வரை சென்று பிரதேச செயலரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் யாழ்.மாவட்ட செயலகம் சென்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதுடன், குறித்த மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டும் என்பதுடன் தமது பிரதேசத்தில் போதைப் பொருட்களை ஒழிப்பதற்கு உடனடியாக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆகியோரிடம் மகஜரை கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ,பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் என பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள்பாவனை வடக்கில் அதிகரித்துள்ள காரணத்தினால் இவ்வாறான படுகொலைகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் சட்டத்துறையினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோரி இந்த கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது. (இ-9)

## சிறுவர் பாதுகாப்பு சட்டங்கள் இறுக்கமாக்கப்பட வேண்டும்

### கல்வி இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் சட்டத்துறை வல்லுநர்கள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களில் கடுமையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென்று, கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இரா தாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக, பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என்போர், அதிக கவனஞ்செலுத்த வேண்டுமென்றும், அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுழிபுரம் மாணவியின் கொலை மற்றும் புத்தளம் பாடசாலை மாணவத் தலைவனின் கொலை தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்டு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாணவி வித்தியாவின் சம்பவம், எமக்கு பல பாடங்களைக் கற்றுத் தந்தாலும், அதன் பிறகு, மீண்டும் இவ்வாறான ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம் நடைபெற்றுள்ளமையானது, இன்னும் எமது சட்டங்கள் இறுக்கமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்துவதாகவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாகச் செயற்படுகின்ற அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன, சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனஞ்செலுத்த வேண்டுமென்று வலியுறுத்திய அவர், அதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்க, கல்வி அமைச்சுத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர், மாணவியரின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளதென்று குறிப்பிட்ட அவர், பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் எந்தளவுக்கு அக்கறையுடன் செயற்படுகின்றார்களோ, அதேயளவு அக்கறையை ஏனைய மாணவர்களிடத்திலும் காண்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (இ-7)

## சூழ்ச்சி கொண்டு தேசிய அரசை கவிழ்க்க முயற்சி



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் தேசிய அரசாங்கத்திலிருந்து கொண்டே சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்[illegible] அமரசேன தெரிவித்[illegible]

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய சுதந்திரக் கட்சியின் இந்த 16 பேரும் ஜனாதிபதிக்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர். அதுமாத்திரமின்றி, தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலத்திலும் ஒரு போதும் அரசங்கத்தின் ஆதரவாளர்களாக இவர்கள் செயற்பட்டதில்லை. பங்காளர்க ளாக இருந்து கொண்டே அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான சூழ்ச்சிகளையே மேற்கொண்டு வந்தனர்.

இந் நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் எஞ்சியுள்ள சுதந்திரக் கட்சியின் 23 உறுப்பினர்களையும் தேசிய அரசாங்கத்திலிருந்து பிரித்து அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவே கூட்டு எதிரணியில் தனியான ஒரு தரப்பினராக அமர்ந்தனர். ஆனால் தற்போது ஒரு நேர்த்தியான கொள்கைகள் இல்லாமல் தனியாக செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களின் பிரதான நோக்கம் சூழ்ச்சிகளை பிரயோகித்து அரசாங்கத்தை கவிழ்ப்பதேயாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாதுகாப்புத்துறைக்கு பாகிஸ்தான் ஆதரவு

### ஜனாதிபதி நன்றி



(கொழும்பு)

இலங்கை முப்படையின் சிரேஷ்ட வீரர்களுக்கு பயிற்சி வழங்கும் வகையிலான பாதுகாப்பு கல்லூரியின் நிர்மாணப் பணிகளுக்கு பாகிஸ்தான் வழங்கிவரும் ஆதரவிற்கு, ஜனாதிபதி நன்றி பாராட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தானின் கூட்டு பாதுகாப்பு நிறைவேற்றுக் குழுவின் பிரதானி, ஜெனரல் சுபாயிர் மஹ்மூத் ஹயான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொலநறுவையிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார். குறித்த சந்திப்பின் போதே ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின்போது, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே முன்னெடுக்கப்பட்டுவரும் இராணுவ பயிற்சிகள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தனவின் அழைப்பின் பேரில், பாகிஸ்தான் கூட்டுப் படைகளின் பிரதானி இலங்கைக்கு நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பாகிஸ்தானின் 17ஆவது கூட்டுப்படைகளின் பிரதானியாக விளங்கும் இவர், பாகிஸ்தான் ஆயுதப் படைகளின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உதயங்க வீரதுங்க டுபாய் சிறையில் தடுத்து வைப்பு



(டுபாய்)

உதயங்க வீரதுங்க டுபாய் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என, சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளனர்.

மிக் விமானக் கொடுக்கல்-வாங்கலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி குறித்த வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றத்தில் தான் ஆஜராகத் தயாரென, ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்ததாக, அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள், நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தனர்.

கொழும்பு - கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில், இந்த வழக்கு, நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சட்டத்தரணிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதேவேளை, மேற்படி மிக் விமான கொள்வனவு மோசடியில் ஈடுபட்டார்களெனக் கூறப்படும் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் உட்பட உயரதிகாரிகள் ஐவரது வங்கிக் கணக்குகள் 40ஐ பரிசோதனை செய்யுமாறு, நீதவான் நேற்று உத்தரவிட்டார். (இ-7)

## யாழில் ஒரு இலட்சத்து 10,000 பேர் பாதிப்பு

# 7 மாவட்டங்களில் வரட்சி வாட்டுகிறது

(கொழும்பு)

நாட்டில் 7 மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் வரட்சி நிலை காரணமாக, 3 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் குடிநீர்ப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

நீர் நிலைகள் வற்றிக் காணப்படுவதனால், சுத்தமாக குடிநீரைப் பெற்றுக் கொள்ள, மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, தற்போது நிலவும் வரட்சி காரணமாக, யாழ். மாவட்டத்தில் 30,408 குடும்பங்களைச் சேர்ந்த 110,156 பேரும், வவுனியா மாவட்டத்தில், 828 குடும்பங்களைச் சேர்ந்த 3,648 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில், 21,272 குடும்பங்களைச் சேர்ந்த 72,263 பேரும், மன்னார் மாவட்டத்தில், 29,421 குடும்பங்களைச் சேர்ந்த, 102,163 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் 726 குடும்பங்களைச் சேர்ந்த, 14,155 பேரும், பொலநறுவை மாவட்டத்தில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும், அநுராதபுரம் மாவட்டத்தில் 3,374 குடும்பங்களைச் சேர்ந்த 10,145 பேரும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் சில பகுதிகளிலும் வரட்சியான நிலையே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் தமது நாளாந்த விவசாய செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)




# அசத்துவாரா ரொனால்டோ

உலக கிண்ண கால்பந்து தொடரில் இன்று நடக்கவுள்ள 'ரவுண்ட் 6' போட்டியில் போர்த்துக்கல், உருகுவே அணிகள் மோது கின்றன.
இதில் ரொனால்டோ சாதிக்கும் பட்சத்தில் போர்த்துக் கல் அணி சுலப வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேற லாம்.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால் பந்து தொடர் நடக்கிறது. சோச்சி நகரில் இன்று நடக்க வுள்ள 'ரவுண்ட் 16' சுற்றுப் போட்டியில் உலகின் 'நம்பர் 4' போர்த்துக்கல் அணி, 14ஆவது இடத்தில் உள்ள கொலம்பியாவை எதிர்கொள் கிறது.

**ரொனால்டோ நம்பிக்கை**

'பி' பிரிவில் இடம் பெற்றிருந்த போர்த்துக்கல் அணி, ஸ்பெயினுக்கு எதிரான முதல போட்டியை 'சமன்' செய்தது. இரண்டாவது போட்டியில் மொராக்கோ அணியை வீழ்த்திய போர்த்துக்கல், ஈரானுக்கு எதிரான 3 ஆவது போட்டியை 'சமன்' செய்தது. மூன்று போட்டியில், ஒரு வெற்றி, 2 'சமன்' என, 5 புள்ளிகளுடன் 2ஆவது இடம பிடித்த போர்த்துக்கல் அணி 'ரவுண்ட் 16' சுற்றுக்குள் நுழைந்தது. கடந்த 2014ல் 'லீக் சுற்றோடு திரும்பிய போர்த்துக்கல் அணி, 2010ல் 'ரவுண்ட் 16' சுற்றுவரை சென்றிருந்தது.

இம்முறை ஸ்பெயினுக்கு எதிராக 'ஹட்ரிக்' சாதனை படைத்து அணியை தோல்வியின் பிடியிலிருந்து மீட்ட அணித் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, மொராக்கோவுக்கு எதிரான போட்டியிலும் ஒரு கோலடித்து வெற்றிக்கு வித்திட்டார்.

இவரது அபார ஆட்டம் இன்றும் தொடர்ந்தால் போர்த்துக்கல் அணி காலிறுதிக்கு முன்னேறிவிடும். ஈரானுக்கு எதிராக கோலடித்து கைகொடுத்த ரிகார்டோ குவாரேஸ்மாவுடன் இளம் வீரர்களான பெர்னார்டோ சில்வா, கான்கலோ குடீஸ், ஆன்ட்ரி சில்வா உள்ளிட்டோர் முழுத்திறமையை வெளிப்படுத்தினால் கோல் மழை பொழியலாம்.

**சாரஸ் பலம்**

'ஏ' பிரிவில் இடம்பிடித்திருந்த உருகுவே அணி, எகிப்து, சவுதி அரேபியா, ரஷ்யாவை வீழ்த்தி 'ஹட்ரிக்' வெற்றியுடன் (9 புள்ளி) முதலிடம் பிடித்து 'ரவுண்ட் 6' சுற்றுக்கு முன்னேறியது. இம்முறை, எதிரணிக்கு ஒரு கோல் கூட விட்டுக் கொடுக்காத ஒரே அணி என்ற பெருமை பெற்றது உருகுவே.

தவிர, இந்த ஆண்டு உருகுவே அணி விளையாடிய 6 போட்டியிலும் எதிரணிக்கு ஒரு கோல் கூட விட்டுக் கொடுக்கவில்லை.

சவுதி அரேபியா, ரஷ்யாவுக்கு எதிராக தலா ஒரு கோலடித்த லூயிஸ் சாரஸ் பலம் சேர்க்கிறார். இவர் இன்னும் ஒரு கோல் அடிக்கும் பட்சத்தில், உலக கிண்ண கால்பந்து வரலாற்றில் அதிக கோலடித்த உருகுவே வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை ஒஸ்கார் மிகுயசுடன் (8 கோல்) பகிர்ந்து கொள்ளலாம். கடந்த போட்டிகளில் கோலடித்து உதவிய ஜோஸ் மரியா ஜிமினஸ் (1 கோல்), எடின்சன் கவானி (1) ஆகியோரும் மீண்டும் சாதிக்கலாம். அணித் தலைவர் டீகோ கோடினின் கவனம் முழுவதும் ரொனால்டோவை கோலடிக்கவிடாமல் தடுப்பதில்தான் இருக்கும்.



இரு அணிகளும் சமபலத்தில் இருப்பதால் வெற்றியை எளிதில் விட்டுத்தர மாட்டார்கள். எனவே போட்டியின் முடிவு 'பெனால்டி ஷூட்-அவுட்' வரை செல்லலாம்.

**1** உலக கிண்ண கால்பந்து அரங்கில் போர்த்துக்கல் - உருகுவே அணிகள் முதன்முறையாக மோத உள்ளன.

**2** கால்பந்து வரலாற்றில் போர்த்துக்கல், உருகுவே அணிகள் 2 முறை மோதியுள்ளன. இதில் போர்த்துக்கல் அணி ஒரு போட்டியில் (1966) வெற்றி பெற்றது. ஒரு போட்டி (1972) 'சமன்' ஆனது.

இதில் போர்த்துக்கல் 4, உருகுவே ஒரு கோல் அடித்தன.

**இருவர்**

உலக கிண்ண கால்பந்து தொடரில் இன்று நடக்கவுள்ள 'ரவுண்ட் 16' போட்டியில் போர்த்துக்கல் - உருகுவே, ஆர்ஜென்ரீனா - பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதில் போர்த்துக்கல், ஆர்ஜென்ரீனா அணிகள் வெற்றி பெறும் பட்சத்தில் வரும் ஜூலை 6ல் நடக்கவுள்ள காலிறுதியில் மெஸ்சி (ஆர்ஜென்ரீனா), கிறிஸ்ரியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்) மோதலாம்.

# மிரட்டுவாரா மெஸ்சி



உலக கிண்ண கால்பந்து தொடரின் 'ரவுண்ட் 16' சுற்றில் ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில், மெஸ்சியின் மந்திர ஆட்டம் வெளிப்பட்டால் வெற்றி பெறலாம்.

'ரவுண்ட் 16' சுற்றுப்போட்டிகளில் இன்று கசான் நகரில் நடக்கவுள்ள முதல் போட்டியில் ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் தோற்கும் அணி வெளியேறும் என்பதால், அனல் பறக்கும் ஆட்டத்தை எதிர் பார்க்கலாம்.

இம்முறை கிண்ணம் வென்றே தீர வேண்டும் என்ற தீர்க்கமான முடிவில் அணித் தலைவர் மெஸ்சி களமிறங்கி உள்ளார். ஆனால், இவரின் இலக்கை அவ்வளவு எளிதாக எட்ட முடியாது என்பதை ஆரம்பத்திலேயே உணர்ந்து விட்டார். கத்துக்குட்டி ஐஸ்லாந்திடம் 'சமன்', குரோஷியாவிடம் படுதோல்வி (0-3) என அடுத்தடுத்து அதிர்ச்சியை சந்தித்தது ஆர்ஜென்ரீனா. இந்த சரிவிலிருந்த அணியை, நைஜீரியாவுக்கு எதிராக வென்று அடுத்த சுற்றுக்கு அழைத்து வந்துள்ளார் மெஸ்சி. 'பெனால்டி' வாய்ப்பை 'மிஸ்' செய்த மெஸ்சி, தான் ஒரு நட்சத்திர வீரர் என்பதை தெரிவிக்க மீண்டும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கடந்த போட்டியில் வெற்றி கோல் அடித்த ரோஜோவின் கலக்கலான ஆட்டமும் நிச்சயம் தேவை.

**மூத்த வீரர்கள்**

30 வயதை எட்டிய கன்சாலோ, ஏஞ்சல் டி மரியோ உள்ளிட்டோரின் பங்களிப்பு சொல்லிக்கொள்ளும்படி இல்லை. கன்சாலோவை பொறுத்தவரை 3 போட்டியில் கோல் அடிக்கவும் இல்லை, சக வீரர் கோல் அடிக்க உதவவும் இல்லை. மூன்றாவது உலக கிண்ணத் தொடரில் பங்கேற்கும் டி மரியோ, எவ்வித முத்திரையும் பதிக்கவில்லை. தற்காப்பு பகுதியில் டாக்லியாபிகோ, ஓடமெண்டி இருந்தும் குரோஷிய வீரர்களை 3 கோல் அடிக்க விட்டனர். இன்று, எல்லா வீரர்களும் ஒன்றுகூடி தேர் இழுப்பது அவசியம் என்பதை உணர வேண்டும். நைஜீரியாவுக்கு எதிரான போட்டியில் களமிறங்கிய வீரர்களில் மாற்றம் செய்ய பயிற்சியாளர் சாம்பயோலி விரும்பமாட்டார்.

**கைகொடுப்பாரா கிரிஜ்மான்**

பிரான்ஸ் அணி லீக் சுற்றை தோல்வியே (2 வெற்றி, ஒரு 'சமன்') சந்திக்காமல் கடந்து வந்துள்ளது. நட்சத்திர வீரரான கிரிஜ்மான், 3 போட்டியில் ஒரு கோல் அடித்துள்ளார். சொந்த மண்ணில் (2016) நடந்த யூரோ கிண்ணத் தொடரில், கலக்கிய இவர் (6 கோல்) அணியை இறுதி வரை முன்னேற கைகொடுத்தார். இந்த 'வேகம்' மீண்டும் வெளிப்படுவது அவசியம். போக்பாவும் தன் பங்கிற்கு ரசிகர்களின் பார்வையை திருப்பி உள்ளார். ஒலிவரும் ஆதிக்கம் செலுத்தினால், வெற்றிக்கு முயற்சிக்கலாம். 3 போட்டியில் 230 நிமிடம் களத்திலிருந்த லூகாஸ் மற்றும் ரபெல் (270 நிமிடம்) என தற்காப்பும் பலமாகவே உள்ளது.

**2** உலக கிண்ண கால்பந்து அரங்கில் பிரான்ஸ் அணிக்கு எதிராக விளையாடிய 2 போட்டியிலும் (1930, 1978) ஆர்ஜென்ரீனா வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதில் ஆர்ஜென்ரீனா 3, பிரான்ஸ் ஒரு கோல் அடித்தன.

**11** ஒட்டுமொத்த கால்பந்து அரங்கில் ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ் அணிகள் இதுவரை 11 முறை மோதியுள்ளன. இதில் ஆர்ஜென்ரீனா 6 (1930, 1971, 1974, 1978, 2007, 2009) பிரான்ஸ் 2ல் (1971, 1986) வெற்றி பெற்றன.

மூன்று போட்டிகள் (1965, 1972, 1977) 'சமன்' ஆனது.

இதில் ஆர்ஜென்ரீனா 12, பிரான்ஸ் 7 கோல் அடித்தன.

## மரண அறிவித்தல்



## கோவிந்தபிள்ளை சீதேவிப்பிள்ளை

**(தங்கம்)**

*நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல-839,கட்சன் வீதி வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை சீதேவிப்பிள்ளை 28.06.2018 அன்று காலமானார்.*

*இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் -பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் சின்னத்தம்பி-வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோவிந்தபிள்ளையின் அன்பு மனைவியும் அம்பிகா, மூர்த்தி, சசி, யோகன், சுந்தரம், சைலி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், சுகந்தி, பாஸ்கரன், நந்தா, றமா (தையல் போதனா ஆசிரியர் பிரதேச செயலகம் கரைச்சி), சத்தியசீலன் (இராமநாதபுர மகா வித்தியாலய ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுதன், விணோ, தீபன், அனுசன், கவியரசன், பாவரசன், திவியன், யபேஸ், சகானா, சபீனா, சுவர்ணன், சாதுஜன், துஸானி, ஹபிஸன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.*

*இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

**இல.839 கட்சன் வீதி, வட்டக்கச்சி.** (சி-3074) **தகவல்:- குடும்பத்தினர்.**

# நிதி அபாயத்தை தவிர்த்துக் கொள்ள முடியும்

(கொழும்பு)

இலங்கையில் புதிதாக அமுலாக்கப்பட்டுள்ள எரிபொருள் விலை சூத்திரம் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டால், சிறந்த பலனைப் பெற முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெப்ஃரி ரைஸ், நாணய நிதியத்தின் செய்தியாளர் சந்திப்பில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் மேற்கொண்ட முக்கிய நகர்வாக, புதிய விலைசூத்திர அமுலாக்கம் அமைந்திருக்கிறது.

இதன் ஊடாக நிதி அபாயத்தை தவிர்த்துக் கொள்ள முடியும். அத்துடன் இந்த மறுசீரமைப்பு மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதை நிதி அமைச்சு தெளிவுபடுத்தி இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வசதியான வாழ்க்கைக்காக நாடகமாடிய போலி வைத்தியர் பொலிஸ் வலையில்

(கொழும்பு)

போலிச் சான்றிதழ்களை தயாரித்து நீர்கொழும்பு பகுதியில் பிரபல வைத்தியராக தன்னை முதன்மைப்படுத்திக் கொண்டு பணக்கார பெண் ஒருவரை ஏமாற்றி திருமணம் செய்த நபர் ஒருவரை நீர்கொழும்பு பொலிஸார் கடந்த 27ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் பணக்கார பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டதோடு மட்டுமல்லாது, பல காரணங்களை சொல்லி மனைவியை ஏமாற்றி விட்டு அவரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு கம்பஹா, பமுனுகம மற்றும் நீர்கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் சூதாடி பல பணக்காரர்களை வஞ்சகமாக ஏமாற்றியும் வந்துள்ளார். இவ்வாறு சூதாடி ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தை குறித்த போலி வைத்தியர் தன்னிடம் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பமுனுகம- வெலிகெடிய பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான ஜோசப் சரன ப்ரதீப் என்பவராவார். கைது செய்த குறித்த சந்தேக நபரை பொலிஸார் பொலிஸ் விளக்கமறியலில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபரை நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளனர். (இ-7)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் N.K.முருகையா



பிறப்பு 1940 10 07

இறப்பு 2016 06 22

ஆண்டுகள் இரண்டு
ஓடி மறைந்தது - உம்
அன்பு முகம் காண
அலைகின்றோம் துடிக்கின்றோம்
காணவருவீரோ
எம் கவலை தீர்ப்பீரோ

மனைவி:- இரத்தினேஸ்வரி முருகையா,
பிள்ளைகள்:- கஜேந்திரராஜ், ரவிப்பிரியா
மருமக்கள்:- விஜயமணி, வசந்தகுமார்
பேரப்பிள்ளைகள்:- தனுஷ்கா, கவிலாஸ்.

இளையதம்பி வீதி,
அளவெட்டி தெற்கு.

(4724)

## துயர் பகிர்கின்றோம்

அமரர் திருமதி
இந்திராணி தேவராஜா



கொக்குவில் கிருபாகர
சிவசுப்பிரமணிய சுவாமி
கோவில் ஆலய வளர்ச்சியில்
பெரும் பங்களிப்பு
வழங்கிவரும் ஆயுட்கால
உறுப்பினர்களான
திரு.ரவிமோகன், சொரூபி,
ரகுதேவராஜா,
ரணாமோகன்
ஆகியோரின்
பாசமிகு தாயார்

அமரர் திருமதி.
இந்திராணி
தேவராஜா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினர்.
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய
கோவில், கொக்குவில்.

## துயர் பகிர்கின்றோம்

அமரர்
ரவீந்திரா ரஞ்சித்குமார்



கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணிய
சுவாமி கோவில் மஹோற்சவ
உபய காரரும் ஆயுட்கால
உறுப்பினரும் ஆலய வளர்ச்
சிக்கு பங்களிப்புச் செய்
பவருமான
திரு.நாகலிங்கம்
ரஞ்சித்குமார்
அவர்களின் பாசமிகு துணைவியார்
அமரர் ரவீந்திரா

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையை அறிந்து எமது ஆலய சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(4723)

ஆலய நிர்வாக சபையினர்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய
கோவில், கொக்குவில்.


## இராசி பலன்

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், உறவினர்களின் வருகையில் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானம் தேவை, உறவினர் விபரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம், பிரபல்யமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** நீண்ட நாளைய நெருங்கிய நண்பர் ஒருவரின் நட்பு இடம் பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** தொட்டகாரியங்கள் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**சிம்மம்:** சிக்கனத்தைக் கடைப் பிடிக்க முற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொழில் போட்டிகள் மாறும்.

**தனுசு:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

### கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| | இராசி பலன் | | சுக், ராகு, புத |
| கேது, சந், செவ் | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்
திருவாதிரை

**30.06.2018**

ஆனி 16, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

துதியை பிற்பகல் 2.36 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 6.11 மணிவரை


சுபநேரம் 2.56-4.26 மணிவரை

இராகுகாலம் 8.56-10.26 மணிவரை


வளவன்

# மாணவிக்கு நீதிகோரி யாழில் நேற்றும் கவனயீர்ப்பு





(படங்கள்: பொ.சோபிகா)



(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பாடசாலை மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி நேற்றுக் காலை யாழ்.பிரதம தபால் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அருட்சகோதரிகள், மாநகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், போராட்டம் முடிந்ததும் சுழிபுரத்தில் உள்ள குறித்த மாணவியின் வீட்டுக்கு சென்று ஆறுதல் தெரிவித்தனர். (இ-9)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்மூளாய் ஆதி பராசக்தி அலங்கார நாயகி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.11 மணியளவில் விநாயகர் வழிபாடுடன் ஆரம்பமாகும்.

மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தேவர்கள் வழிபாட்டிற்காக திருக்கதவம் காப்பிடல், யக உத்வாசனம் தசமங்கள் பூசை, திருமுறை ஓதி திருக்கதவம் திறத்தல், தசமங்கள் தரிசனம், தூபி அபிஷேகம், விசேட பூசை என்பன இடம்பெறும்.

• • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான சிவ மஹா இராஜ கோபுர பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.12 மணிக்கு நடைபெறும்.

• • • • • • • • • • • • • •

கோவிலாக்கண்டி திருமூல நாயகி அம்பாள் சமேத திருமூலேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் முற்பகல் 10 மணிக்குமிடையில் நடைபெறும். அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை இடம்பெறும். (இ)

## வடக்கில் வன்கொடுமை, படுகொலை தொடர் நிகழ்வுகளாகியுள்ளன

### நீதி சமாதான ஆணைக்குழு அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

கடந்த 25 ஆம் திகதி சுழிபுரத்தில் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட 6 வயது மாணவி சிவனேஸ்வரன் றெஜீனாவின் கொலை எங்கள் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. வித்தியா, சாளினி, றெஜீனா என்று வடபகுதியில் இவ்வாறு கொலைகள் நிகழ்வது தொடர் நிகழ்வுகளாகியுள்ளன. ஒவ்வொருமுறையும் இனிமேல் ஒருவருக்கும் இவ்வாறு நிகழக்கூடாது என்று எல்லா மட்டங்களிலும் எடுக்கப்படும் தீர்மானங்கள் வீணாகின்றன.

இதுபோன்ற நிகழ்வுகளுக்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாகிய போதைவஸ்து கடத்தலும் பாவனையும் நின்றபாடில்லை. நகரங்களின் பிரபல பாடசாலை மாண வர்கள் மத்தியில் இருந்த போதைவஸ்துப்பாவனை கிராமப் புறங்களுக்கும் பரவியுள்ளது. போதைவஸ்துக் கடத்தல்கள் குறைவின்றி இடம்பெறுகின்றன. சிலவேளைகளில் போதைவஸ்து கடத்தலில் பாதுகாப்புப் பிரிவினர் ஈடுபடுவதும் போதைவஸ்துப்பாவனை, கடத்தல், வாள்வெட்டு போன்றவற்றில் ஈடுபடுகின்றவர்களில் கணிசமானோர் விரைவில் பிணையில் விடுவிக்கப் படுவது அவர்கள் மீண்டும் அச் செயல்களில் ஈடுபடுவ தும் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்து கின்றன.

பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாதுகாக்கவும் தீவிரமாகக் கண்காணிக்கவும் கடமையுள்ளவர்கள். ஒரு காலத்தில் சிறுவர், இளம் பெண்கள் பாதுகாப்பாக எந்நேரத்திலும் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குத் தனியாகச் சென்று பாதுகாப்பாக திரும்பக் கூடிய நிலையிருந்தது. இன்று அந்நிலை இல்லை என்பதை எல்லோரும் ஏற்றுத் தானாக வேண்டும்.

மதத் தலைவர்களும் மத அமைப்புக்களும் தமது ஆலயங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வரும் இளையோருக்கான கருத்தமர்வுகள் மற்றும் வழிகாட்டல் நிகழ்வுகளை நடத்துவதோடு நின்றுவிடாமல், திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் போதைப் பாவனைக்குள்ளானோர் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதில் நாட்டம் கொண்டிருப்போரையும் தேடிநாடிச் சென்று துறைசார் நிபுணர்களின் துணையோடு அவர்களை நல்வழிப்படுத்தும் திட்டங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

றெஜீனா போன்ற சிறுமிகள் கொலை போன்ற நிகழ்வுகள், இன்னும் போதியளவு வெளிவராத துஷ் பிரயோகங்கள் வேலியே பயிரை மேய்தல் போன்ற நிகழ்வுகளும் தொடர்ந்து கொண்டிருக்கும். வாள்வெட்டு, வீடு புகுந்து கொலை, கொள்ளை போன்ற செயல்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதும் சட்டத்தை அமுல்படுத்துகின்றவர்கள் வினைத்திறனுடன் அவற்றை செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

எனவே, காத்திரமான நடவடிக்கைகளை எடுக்குமாறு எல்லோரையும்குறிப்பாக பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்கள், மதத் தலைவர்கள், மத அமைப்புக்கள், புத்திஜீவிகள் அமைப்புக்கள், அரசியல்வாதிகள் இதுபோன்றவற்றுக்கு நேரடி பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் மற்றும் முக்கியமாக சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் எல்லோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கதிரைகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

தனது 2018ஆம் ஆண்டுக்கான வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்துக்கு ரூ.75 ஆயிரம் பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் பாடசாலையில் அதிபர் தலைமையில் இடம்பெற்ற காலைப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொண்டு மேற்படி கதிரைகளை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேசசபை உறுப்பினர் சி.அகீபன், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)

## முத்தமிழ் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழா நிகழ்வுகளில் ஒன்றான "முத்தமிழ் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்" நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் உப தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ச.சுகிர்தன், வே.சிவயோகம், க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உபதவிசாளர் கு.தினேஸ், கௌரவ விருந்தினர்களாக யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க.கிருஷ்ணகுமார், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.ஜெயக்குமார், பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பி.ஆர்.சமன் ஜெயலத் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## நேற்று பிற்போடப்பட்ட விளையாட்டுவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

நேற்று 29.06.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று 30.06.2018 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏற்கனவே திட்டமிட்டபடி யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரட்னம் சந்திரராஜா அறிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சகல அதிபர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என வலயக்கல்வி அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விபத்தில் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - அரசடிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.40 மணியளவில் மோட்டார் சைக்கிளும் ஹயஸ் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். மந்துவில் மேற்கைச் சேர்ந்த தெ.தெய்வகாண்டீபன் (வயது-29), மீசாலை வடக்கைச் சேர்ந்த இ.நடராசசுந்தரம் (வயது-59) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

## மணமகள் தேவை

04.11.1978இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற பொறுப்புக்கள் இல்லாத கம்பீரமான படித்த நல்ல பதவியிலுள்ள பிரான்ஸ் பிரஜைக்கு இலங்கைத் தமிழ் பெற்றோர் பொருத்தமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றனர்.
மணமகன் : கேட்டை, விருச்சிகம், பாவம்:38

25.04.1982 இல் பிறந்த படித்த பிரான்ஸ் பிரஜைக்கு இலங்கைத் தமிழ் பெற்றோர் பொருத்தமான அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றனர்.
மணமகன்: கார்த்திகை, இடபம்

email: muruga46@hotmail.com.
தொடர்பு:Kumaramurugan@yahoo.co.in

ஜூலை 14 வரை இலங்கை (076 534 7523),
ஜூலை 19இன் பின் பிரான்ஸ் (0033 6521 46227)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி யாழ்.இந்துவில்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இப் போட்டி தரம் 1, 2, 3, 4 பிரிவுகளுக்கு நடத்தப்படவுள்ளன. தரம் 1, 2பிரிவுகளுக்கு "நத்தார் படை ஞானன்பசு", "பொன்னார் மேனியனே" ஆகிய இரு திருமுறைகளும், தரம் 3, 4 பிரிவுகளுக்கு "பித்தாபிறைசூடி பெருமானே", "மற்றுப்பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் ஜூலை 08ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும், பரீட்சைச்செயலருமான சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ-7)

## YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION-JAFFNA

YMCA

## கேள்வி கோரல்

யாழ்.வை.எம்.சீ.ஏ.கட்டடத்தில் கச்சேரி-நல்லூர் வீதியில் அமைந்துள்ள கடை (10'x31') 01.09.2018 தொடக்கம் 31.08.2019 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முடிவுத் திகதி: 09.07.2018

கேள்வி கோரல்கள் அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
வை.எம்.சீ.ஏ,
இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

கேள்வி கோரல் தெரிவின் போது தொழிலின் தன்மை, முன் அனுபவம், நன்மதிப்பு என்பவை கவனத்தில் கொள்ளப்படும்.

-பொதுச் செயலாளர்-

(சி-3063)

## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்



## யாழ். கம்பன் விழா-2018

**2018 ஜூன் 29, 30, ஜூலை 1 ஆகிய திகதிகளில்**
**நல்லூர் கம்பன் கோட்டம்,நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபம்.**

### 30.06.2018 சனிக்கிழமை 2ஆம் நாள் அமர்வு

**மங்கல விளக்கேற்றல்:**
**திரு.எஸ். பாலசிங்கம் தம்பதியர்** (சைவ முன்னேற்றச் சங்கம், பிரித்தானியா)

**கடவுள் வாழ்த்து: திருமதி.பி.ஹம்சத்வனி**

**தலைமையுரை:**
**கலாநிதி.மனோன்மணி சண்முகதாஸ்** (முன்னாள் பேராசிரியர், கக்சுயின் பல்கலைக்கழகம்)

**தொடக்கவுரை:**
**பேராசிரியர்.வ.மகேஸ்வரன்** (தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)
**கவியரங்கம்: தலைவர்: கவிஞர்.சோ.பத்மநாதன்**
பொருள்: **"நாடுயரக் கம்பன் நமக்கீயும் நல்வழிகள்"**
பற்றின்மை- **ச.முகுந்தன்**, ஒழுக்கம்-**கிண்ணியா அமீர் அலி**, ஒற்றுமை- **நாக.சிவசிதம்பரம்**, நட்பு-**அலி அக்பர்**, தியாகம்-**சி.சிவகுமார்**, வீரம்-**த.சிவசங்கர்.**

**உரை அரங்கம்: தலைவர்: "இலக்கியச்சுடர்" த.இராமலிங்கம்.**
பொருள்: **"படித்ததும் ரசித்ததும்"**
**கவி-நயப்போர்:**
கண்டதும் கேட்டதும் -அ.வாசுதேவா, கேட்டதும் சொன்னதும்-க.கருணாகரன்
சொன்னதும் செய்ததும்-கு.புரந்தரன், செய்ததும் நினைந்ததும்-ச.லலீசன்

### 30.06.2018 சனி மாலை 4.30 மணி

**மங்கல இசை: திரு.வி.சித்தார்த்தன், திரு.வி.பிரதித்தன் குழுவினர்.**

**மங்கல விளக்கேற்றல்: வைத்திய நிபுணர் எஸ். பிரேமகிருஷ்ணா தம்பதியர்.**
(உணர்வழியியல் நிபுணர், யாழ். மருத்துவபீடம்)

**கடவுள் வாழ்த்து: திரு.ம.தயாபரன்**
**தலைமையுரை: கௌரவ சீ.வி.கே.சிவஞானம்**(அவைத்தலைவர், வடமாகாணசபை)
**தொடக்கவுரை: கௌரவ த.சித்தார்த்தன்** (பாராளுமன்ற உறுப்பினர்)

**விருது வழங்கல்:**
**பெறுபவர்: லயஞான சிரோன்மணி தவில் வித்துவான் ஆர்.புண்ணியமூர்த்தி**

**பட்டி மண்டபம்:**
**நடுவர்: "கம்பவாரிதி" இ.ஜெயராஜ்**
பொருள்: **"கற்போர் நெஞ்சைப் பெரிதும் கலங்கச் செய்யும் உரையாடல் எது?**
கைகேயி-**தசரதன் உரையாடலே!** - **தி.திருநந்தகுமார், ஆறு.திருமுருகன்.**
கோசலை-**பரதன் உரையாடலே!-த.இராமலிங்கம், ந.விஜயசுந்தரம்**
வீடணன்-**கும்பகர்ணன் உரையாடலே!- இரா.செல்வவடிவேல், ஸ்ரீ.பிரசாந்தன்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.** (க)

அகில இலங்கைக் கம்பன் கழகம்.

## காணி விற்பனைக்கு

சங்கானை மாலியவத்தை ஒழுங்கையில் 6 பரப்பு குடியிருப்புக் காணி நல்ல சுற்றாடலில் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
**தொடர்பு: 076 534 7523**

(4722)

## விற்பனையாகிறது

**தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு**



Rs. 700/-

**பூமாலை**

**15 ஆசிரியர்களின் 15 மாதிரி வினாத்தாள்கள்**

புனிலங்காஸ் பப்ளிக்கேஷன் 077 6258778

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

# VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under mentioned post from suitably qualified persons up to 16.07.2018 for the Operations Technical Secretariat (OTS) of the Accelerating Higher Education Expansion and Development (AHEAD) project of the University.

**1. SECRETARY- ON CONTRACT (01 POST)**
**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

I.Having passed the G.C.E.(O/L) examination in six (6) subjects with three (3) credit passes including English and Sinhala / Tamil language with a secretarial course from a recognized institution or pursuing examinations leading to Chartered Secretary with minimum 5 years' experience in the relevant field.

**OR**

II.A Chartered Secretary with at least 4 years' experience in the relevant field.

**AND**

Work experience with World Bank funded higher education operations would be an added qualification.

**PROFESSIONAL COMPETENCIES REQUIRED**

- High level of proficiency in written and spoken English.
- Proven ability to handle Operation activities related to Finance and Procurement activities in the University in accordance with the World Bank guidelines.
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- High level of IT literacy, especially in the areas of Word, Excel, email and internet.
- Ability to communicate effectively orally in Sinhala or Tamil.
- Ability to communicate in English with the World Bank, MHEH, UGC, OMST and others.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

- A monthly payment of Rs. 46,000.00 and applicable EPF and ETF will be paid
- This appointment is a fulltime (contract basis) for a period of 12 months and may be renewed based on performance during the operation period.

**CONDITIONS OF SERVICE**

Selected candidates if presently serving in a Government Department / Corporations/ Statutory Boards will have to obtain his/her release through their respective appointing authority.


**HOW TO APPLY:**

Applicants who are interested in the above post are requested to submit their application through the E-mail **drnae@univ.jfn.ac.lk** copied to **ots@univ.jfn.ac.lk** in the prescribed form available in the University of Jaffna website www.jfn.ac.lk . Date for interview will be notified to the eligible candidates through E-mail.

**Note:** Applicants in the Service of Government, Corporations and Statutory Board can submit their application directly. When they present for the interview they should bring a hardcopy forwarded through the Head of Institution concerned.

**-Registrar-**

(C-3069)





உலக யோகாதினத்தை முன்னிட்டு, இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியினால் உலக யோகாதினத்தில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம், மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை, மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலயம், மு/ முள்ளிவாய்க்கால் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், மு/ மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம், மு/ இரணைப்பாலை றோ.க. வித்தியாலயம் , மு/ ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு யோகாப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப் பயிற்சியை இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியின் இயக்குநரும் , யோகா ஆசிரியருமான ஜெயம் ஜெகன் வழங்கி வைத்தார்.

# புலிகளின் தங்கத்தைத் தேடி நேற்றுமுன்தினமும் அகழ்வுப் பணி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கனகாம்பிகை குளம் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட தங்கம் தொடர்பில் அகழ்வுப் பணிகள் நேற்று முன்தினம் வியாழக் கிழமையும் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 26 ஆம் திகதி செய்வாய்க்கிழமை குறித்த பகுதியில் அமைந்துள்ள வாய்க்காலை அண்மித்த பகுதியில் விடுதலைப் புலிகளால் தங்கம் புதைக்கப்பட்ட இடம் என தெரிவித்து சுமார் 5 மணிநேரம் வரையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்ற பதிவாளர், கரைச்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர் ஆகியோரின் முன்னிலையில் குறித்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது எவ்வித பொருட்களும் மீட்கப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீண்டும் மன்றின் அனுமதியுடன் பொலிஸார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பிற்பகல் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் இரவு 9 மணிவரை முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பக்கோ இயந்திரம் பழுதடைந்த நிலையிலும், எவ்வித பொருட்களும் கிடைக்காத நிலையிலும் கைவிடப்பட்டது. எனினும் அகழ்வின்போது அகற்றப்பட்ட மண் மீண்டும் அதிகாலை 4 மணியளவிலேயே மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது ஆமை ஒன்று உயிருடன் பிடிக்கப்பட்டு பாதுகாப்பாக அருகிலிருந்த நீரோடையில் விடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (2)

# சிறுமி றெஜினாவின் கொலையை கண்டிக்கிறார் பிரதிவிவசாய அமைச்சர்

சுழிபுரம் காட்டுப்புலம் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை சிறுமி றெஜினா கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டமையை பிரதி விவசாய அமைச்சர் கண்டித்துள்ளார். பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினருமான சதாசிவம் இராமநாதன் பாதிக்கப்பட்ட றெஜினாவின் உறவினர்களை சந்தித்திருந்தார். பிரதேச ரீதியாக செயற்படும் அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் உயர் அதிகாரிகளுக்கும் கட்சியின் இணைப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்களின் காரணமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த பிரதேச துறைசார் அதிகாரிகள் கரிசனையுடன் கூடிய கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். பொலிஸாரிடம் இருந்து குற்ற புலனாய்வு திணைக்களத்திற்கு வழக்கை விசாரிக்க பாரப்படுத்துமாறும் பிரதி விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (2)

# சிறுத்தை கொலை வழக்கு 10 பேருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் சிறுத்தை ஒன்றின்மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சம்பவம் தொடர்பில் கடந்த 22ஆம் திகதி ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் ,மற்றுமொருவர் மறுநாள் 23 ஆம் திகதி பொலிஸில் சரணடைந்திருந்தார். குறித்த இருவரையும் கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் மயில்வாகனம் கிரேசியன் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். குறித்த இருவரையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதுடன், ஏனையவர்களை விரைந்து கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு மன்று உத்தரவிட்டிருந்தது.

இதன் பின்னர் கடந்த 23 ஆம் திகதி மாலை மேலும் மூவர் பொலிஸில் சரணடைந்ததுடன், மற்றுமொருவரை இரவு பொலிஸார் கைது செய்திருந்தனர். குறிப்பிட்ட நால்வரையும் கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். குறித்த நால்வரையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

சிறுத்தை கொலைச் சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் மேலும் நான்கு பேர் சரணடைந்திருந்தனர். அவர்களுடன் சேர்த்து 10 பேரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாகவும் 6பேர் 29ஆம் திகதி வரை தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மேலும் நால்வர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். அனைவரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (2)


# மாணவர் பாராளுமன்ற அமர்வு



மாணவர்களிடையே ஜனநாயகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவர்களின் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுத்தலையும் கருப்பொருளாக கொண்டு மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம் இலங்கையில் அமுலாக்கப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், எமது பாடசாலையில் மாணவர் பாராளுமன்றத் தேர்தலானது கடந்த 09.03.2018 அன்று தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிய எமது கல்லூரி முதல்வர் ஜி. கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றிருந்தது. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமர்வானது, மாணவர் பாராளுமன்ற சபாநாயகரின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சத்தியப்பிரமாணத்துடன், தெரிவாகிய அமைச்சுக்களின் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருந்தன. (2)



குருநகர் கடற்கரை வீதி பாலம் கடற்கரை வீதியில் அண்ணா- எம்.ஜி. ஆர் சிலைகளுக்கு முன்பாக அமைந்துள்ளது. பாலத்தின் கீழ்ப்பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதால் புனரமைக்கப்படுகின்றது. இப் பாலமானது சுமார் ஐம்பது வருடாங்களுக்கு மேலாக அமைக்கப்பட்டது. வீதிகள் அபிவிருத்தி அதிகார சபையினால் இவ் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுகின்றது. இவ் வீதியால் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. (2-106)

# தொகைமதிப்புப் புள்ளி விபரத்திணைக்களம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை தொகுக்கிறது

(கொழும்பு)

நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பீடுகளை மாற்றியமைப்பதில் இலங்கை மத்திய வங்கி தொடர்புபட்டிருக்கிறது என்ற பொருளில் ஆர்வமுடைய தரப்பினரால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கை பொதுமக்களைப் பிழையாக வழிநடத்துமொன்றாகும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தொகுக்கிறது என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளைத் தொகுக்கின்ற ஏக பொறுப்பு 2007 இலிருந்து தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனினும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை மாற்றியமைப்பதில் இலங்கை மத்திய வங்கி தொடர்புபட்டிருக்கிறது என்ற பொருளில் ஆர்வமுடைய தரப்பினரால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கை பற்றி மத்திய வங்கி தனது அவதானிப்பினைச் செலுத்தியிருக்கிறது. இது பொது மக்களைப் தவறாக வழிநடத்துமொன்றாகும்.

2006 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கி மற்றும் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் இரண்டினாலும் தொகுக்கப்பட்டு பரப்பப்பட்டன. எனினும், தரவுத் தொகுப்பின் வகிபாகத்தினைச் சுயாதீனமான அதிகார சபையொன்றிடம் ஒப்படைப்பதன் முக்கியத்துவத்தினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளைத் தொகுப்பதனை இடை நிறுத்திக் கொண்டதுடன் .மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை தொகுக்கின்ற பொறுப்பாண்மை தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திடம் ஏக முறையில் கையளிக்கப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளைத் தொகுப்பதற்கு மேலதிகமாக, சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பிற்கு உதவுவதற்காக பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையியல்களைத் தொடர்ந்து தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நுகர்வோர் விலைகள், தொழிற்படை, வறுமை போன்றன மீதான புள்ளிவிபரங்களைத் தொகுக்கின்ற பொறுப்பினையும் தன்னகத்தே வைத்திருக்கிறது. இலங்கை மத்திய வங்கி பொருளாதார பகுப்பாய்வு மற்றும் நாணயக் கொள்கை உருவாக்க நோக்கங்களுக்காக அத்தகைய மதிப்பீடுகளின் முக்கிய பயன்படுத்துநராகத் தொடர்ந்தும் இருந்து வருகிறது.

எனவே, இலங்கை மத்திய வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை மாற்றியமைப்பதில் ஈடுபட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு எந்தவித ஆதாரமுமில்லை. (2-7)



முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவம் கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்றது. அந்தவகையில் கடந்த 27ஆம் திகதி தீர்த்தத்திருவிழா பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது. பலஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசம் முழங்க தீர்த்தத் திருவிழா இடம்பெற்றது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கிராமப்புறப் பாடசாலைகளில் பிள்ளைகள் கற்பதற்கு பெற்றோர் உறுதுணையாக இருக்க வேண்டும்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டம் தினம் தினம் ஆக்கிரமிக்கப்பட்டு முழுமையான ஆக்கிரமிப் பிற்குள்ளாகும் அபாயம் தோன்றியுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வு இரண்டு அமர்வுகளாக நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இரண்டாவது அமர்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்கு பெற்றோர்களின் பங்களிப்பு மிகமிக முக்கியமானதாகும்.

கடந்த காலங்களில் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்ற பலர் இன்று உயர் பதவிகளை வகித்து வருகின்றார்கள். ஆனால் இப்போது நகர்ப்புறப் பாடசாலைகளை நோக்கி நகர்கின்றனர்.

நகர்ப்புறப்பாடசாலைகளில் எங்கள் பிள்ளைகள் படிப்பது பெருமையா? அல்லது நகர்ப்புறப்பாடசாலைகளுக்கு பெருமையா? என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

பல அரசியல்வாதிகள் எங்களுக்கு வாக்களித்தால் நாங்கள். காமராஜர் போல ஆட்சி ஏற்படுத்துவோம் என்று கூறுகின்றார்கள், தமிழ் நாட்டில் காமராஜர் ஒரு தடவை மட்டும் முதல்வராக இருந்து பெருமை சேர்த்தவர், அதேபோல பெற்றோர்களும் சிந்தித்து தங்கள் பிள்ளைகள் இந்தப் பாடசாலைகளில் கல்விகற்று இதற்குப்பெருமை சேர்க்கவேண்டும் என்று நினைக்க வேண்டும். இப்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவான தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாயில் இருக்கின்ற பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் நல்ல பெறுபேற்றைப் பெற்றிருக்கின்றார்கள். இன்று அவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்கு மேலும் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

இதேபோல பூநகரி விநாசியோடையிலும் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

எங்கள் பிள்ளைகளை கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு பெற்றோர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும்.

பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவி தர்சிகா ஆசிய மட்டப் பளுதூக்கல் போட்டியில் சாதனை படைத்திருக்கின்றார், இது கிராமப்புறப்பாடசாலையில் இருந்து கிடைத்திருக்கின்ற ஒரு சாதனை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(2-315)






# உழவனூர் வீதி புனரமைப்பு இடைநிறுத்தம் தரமான கிரவல்; சான்றிதழ் கையளிப்பு

(பரந்தன்)


கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட உழவனூர் கிராமத்தின் பிரதான வீதி புனரமைப்பு தரமற்ற கிரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் கரைச்சி பிரதேச சபையின் மேற்பார்வையில் வீதி புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு முதற்கட்டமாக கிரவல் மண் பறிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறித்த கிரவல் தரமற்றது எனவும் அது கிரவல் அல்ல மக்கி மண் எனவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டு வீதி புனரமைப்பு பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன.

குறித்த மக்கி மண்ணைக்கொண்டு வீதி புனரமைப்பு பணிகள் இடம்பெற்றால் வீதியானது குறுகிய காலத்திற்குள் சேதமடைந்து விடும். மிக மோசமான வீதியாக இருந்த உழவனூர் பிரதான வீதி முதற் தடவையாக பல மில்லியன்கள் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யும் போது அந்தப் புனரமைப்பு பணி தரமானதாக இருக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனை தொடர்பு கொண்டு வினவிய போது, உழவனூர் வீதி புனரமைப்பு பணிக்கு பயன்படுத்துவதற்கு பறிக்கப்பட்ட கிரவலின் தரம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக வீதிப் புனரமைப்பு பணிகள் இடை நிறுத்தப்பட்டு தற்போது கிரவல் மாதிரிகள் தர பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அவை தரமான கிரவல் என சான்றிதழ் பெறப்பட்டு தற்போது கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் தரச் சான்றிதழ் கையளிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது அவற்றைக் கொண்டு வீதியினை புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார். (2-312)

# சட்டவிரோதமாக கற்றாழை அகழ்வு மன்னாரில் இருவர் கைதாகினர்



(மன்னார்)

மன்னார் மாவட்டம் புதுக்குடியிருப்பு கிராமத்தின் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமான நாரா பாடு பகுதியில் சட்டவிரோதமாக கற்றாழை அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 253 கிலோ கிராம் கற்றாழைச் செடிகளுடன் வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுக்காலை 9 மணியளவில் புதுக் குடியிருப்பு கிராமத்தின் நாரா பாடு பகுதியில் சட்டவிரோதமாக கற்றாழை அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இருவரும், பிடுங்கப் பட்டு விற்பனைக்காக கொண்டு செல்வதற்காக தயார் நிலையில் காணப்பட்ட 253 கிலோகிராம் கற்றாழைச் செடிகளும் ஒரு வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக சில பிரதேசங்களில் வியாபார நோக்கத்திற்காக கற்றாழைச் செடிகள் களவாடப்பட்டு வருகின்றது. இக் கற்றாழைச் செடியானது பல மருத்துவக்குணத்தையும் நன்மைகளையும் கொண்டதுடன்.இதன் மூலம் பல விலையுயர்ந்த பாவனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதனால் மன்னார் எருக்கலம்பிட்டி, சாந்திபுரம்,தாராபுரம் ஆகிய கிராமங்களில் இருந்தும் இவ்வாறான செடிகள் மற்றும் வளங்கள் வியாபார நோக்கத்திற்காக பிடுங்கப்பட்டு வெளி பிரதேசங்களுக்கும் வெளிநாடுகளிற்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் சில இனம் தெரியாத நபர்களால் வங்காலை கிராமத்தில் வெளி பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்காக சட்டவிரோதமாக கற்றாழைச் செடிகள் பிடுங்கப்பட்ட போது பொதுமக்களின் எதிர்ப்பால் குறித்த முயற்சி தடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான சட்டவிரோத அகழ்வுகள் இடம் பெறும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்தில் இருந்து கற்றாழைச்செடிகள் முற்றாக அழிந்து போகும் நிலை ஏற்படும் என்பது உண்மையாகும்.

கைப்பற்றபட்ட கற்றாழைச்செடிகளும் சந்தேக நபர்களும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (2)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள மந்துவில் பகுதியில் பாரதிதாசன் இளைஞர் நூலகத் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குறித்த கட்டடத்தைத் திறந்து வைத்தார். அத்துடன் ஒரு தொகுதி நூல்கள் கையளிக்கப்பட்டன.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—159

## உப்பிட்டதனால் உயிர்ப்பையிழந்த மண்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இன்றைய தலைப்பு ஏதோ ஒன்றை தெரிந்ததை சொல்ல வந்ததாக நீங்கள் நினைத்திருக் கின்றீர்கள்! அதுதான் இல்லை. வேளாண்மையில் உப்பிட்ட வரை உள்ளளவும் நினை என்பது மாற்றிப்பார்க்க வேண்டியிருக் கின்றது. இந்த விளக்கத்தை நான் கூறவில்லை. வேளாண் விஞ் ஞானி நம்மாழ்வார் கூறியது. அனைவருக்கும் அடித்துக்கூறி யது "இது. உப்பிட்டவரை உள்ள ளவும் நினை. அதுதான் உப்பு உப்பாக தந்தவரை அந்த மேலைத் தேயத்தவரை உள்ளளவும் நினைந்து நினைந்து இன்னும் உப்பு உப்பாக நிலத்திற்கு வாரியி றைத்து நொந்து போங்கள் என்பது தான். உப்பினை பயன்படுத்தத் தொடங்கினால் பின்னர் அதிலி ருந்து விடுபட வழியில்லை என்ப தன்னை சொல்லாமல் சொன்ன சேதியிது. நம்மாழ்வார் மறைந்தா லும் அவர் கூறிய விடயங்கள் உங்களுக்கு இன்றும் பயன்படும் பாருங்கள். இதனை கருத்திலெ டுத்து பல கிராமங்கள் தம்மை மாற்றியமைக்க முயற்சி செய்து பயனும் கண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவின் கேரள மாநி லத்திலே 2006 ஆம் ஆண்டு கோழிக்கூடு என்னுமிடத்திலு ள்ள வெங்கேரி கிராமத்தில் 1824 குடும்பங்கள் இருந்தன. இந்த கிராம மக்களிடையே நடைபெற்ற கருத்துக்கணிப்பில் 7 பேருக்கு புற்றுநோயிருந்தது தெரிய வந்தது. புற்றுநோயினை தோற்று விப்பதற்கு பல காரணங்கள் இருப் பினும், ஒருகாரணமான பீடை நாசினிகளின் அதீத பயன்பாடு இருந்ததாக ஊகிக்கப்பட்டது. இத னுடன் பிளாஸ்ரிக்கின் பிரிந்தழிவி னால் வரும் டையொட்சினி னால் ஏற்படும் சேதமும் அதிகரி ப்பது தெரியவந்தது. இதில் 110 குடும்பங்கள் இணைந்து நிரவு என்னும் சேதன விவசாய அமைப் பினை உருவாக்கி,சேதன முறை யில் மரக்கறிப்பயிர்களை உற்பத்தி செய்ய முடிவெடுத்து அதில் வெற் றியும் கண்டிருக்கின்றனர். வெளியி லிருந்து எந்த மரக்கறிப்பயிரை யும் அவர்கள் தங்களது பாவனை க்கு பயன்படுத்தாது தடுத்தனர். இது அவர்களின் மனதில் ஏற்பட்ட முதல் மாற்றம். பின்னர் அரசாங்கத் தின் உதவிகள் இதனை செயற்படுத்த கிடைத்ததால் தங்களது முயற் சியை விரிவுபடுத்தி ஏனைய குடு ம்பங்களையும் தம்மோடு இணை த்துக் கொண்டனர். தற்போது வெங் கேரி கிராமம் முற்றிலும் ஒரு சேதன கிராமமாக பரிணமித்திருக்கின் றது. இதற்கு மக்களின் ஒத்துழை ப்பும் ஊக்கமும் தான் காரணம் என அக்கிராமத்துத் தலைவர் தெரி வித்திருக்கின்றார்.

முற்றிலுமாக சேதன முறை விவசாயத்தை செய்வதனால் அதனை முறையாக பரிசீலித்து அரசாங் கமே அதனை சேதனக் கிராமமாக அறிவித்தலும் செய்தது. இது அங்கு ள்ள மக்களுக்கு இன்னும் மகிழ்ச் சியையும் ஊக்கத்தையும் தந்தது. தொடர்ந்தும் அனைத்து மக்களும் சேர்ந்து சேதன விவசாயத்தை முழு வதுமாக செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்களது உணவை தாங் களே உற்பத்தி செய்வதற்கு அவர் களால் முடிந்தது.

நிரவு என்னும் அமைப்பு 2010 இல் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட திலிருந்து அதனது ஆக்கபூர்வ மான செயற்பாடுகளினால் மக்களின் வாழ் வாதாரம் சிறக்கத் தொடங்கியது. இதற்கு அரச மட்டத்திலிருந்து தங்களுக்கு கிடைத்த ஊக்கமும் உதவிகளும் இன்னும் தங்களது செயற்பாடுகளை விரிவாக்கத் தூண் டியதாக கூறுகின்றார்கள். சேதன விவசாயப் பொருட்கள் என்பதனால் அதற்கு கிராக்கியும் வரத்தொடங் கியது. முக்கியமான இடங்களில் இவர்களது விளை பொருட்கள் விற்கப்படத் தொடங்கின. விமான நிலையம்,பேருந்து நிலையங்கள் இன்னும் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் சேதன விவசா யப் பொருட்களுக்கு மக்கள் முண் டியடித்துக் கொண்டு வாங்கிச் செல் வது இன்னும் இவர்களுக்கான உற்பத்தி இலக்கை மேல் நோக்கி நகரவைத்தது. கிராம மக்கள் தங் களது சேதன முறை விவசாய பயிர்ச் செய்கையின் விளை பொருட்களுக் கான கேள்வி அதிகரித்ததை சாதக மாக பயன்படுத்திக் கொண்டார்கள். இவர்களது கம்பனியின் விளை பொருட்களை வாங்குவதற்காக முந்தி நின்ற பெரிய கம்பனிகள் எல்லாம் இவர்களின் ஆதாய இலக் கினை ஒரு கோடி ரூபாவிற்கு எட்ட முடியுமா? என இறுமாப்புடன் கேட்ட போது, அந்த வருடமே தங்களின் ஆதாய இலக்கினை மூன்று கோடி ரூபாவிற்கு ஏற்றிக்காட்டி தங்களின் ஆளுமையை நிரூபித்திருக்கின் றார்கள் எனப் பெருமையுடன் கூறி னார் அந்த அமைப்பின் தலைவர். மக்கள் இணைந்தால், மனது வைத் தால், தங்களது மனதை மாற்றி னால் இவ்வாறான மாற்றம் ஒன் றினை கொண்டு வரலாம் என்பத ற்கு இது உதாரணமல்லவா. இவ் வாறான கைங்கரியம் இங்கு எங் கள் பிரதேசத்தில் நடைபெறுமா? அதற்கான மாற்றத்தை எம்மவர் களிடம் கொண்டுவரலாமா என நீண்ட நாள் சிந்திக்கத் தோன்றுகின்றது.

இதனை தெரிந்தவர்களிடம் கூறியபோது எங்களுடைய மக் களோ! ஆகின்ற காரியமா இது என என்னை ஏளனமாகப் பார்த் தார்கள். சரி அப்படிப்பட்டவர்களை நாம் என்ன செய்யமுடியும்? இதற் குள் விருப்பப்படுபவர்களை ஒன்றி ணைத்தால் இது நடக்கும். எல்லாம் எங்கள் கைகளிலேயே தங்கியிருக் கின்றது. மக்கள் நன்மையானது தங்களுக்கு இதிலிருந்து பயன் கிடைக்கும் என்றால் நிச்சயமாக ஒன்றிணைவார்கள். மாற்றம் ஒன்றே எமக்குத் தேவையானது.

சரி உப்பில் ஆரம்பித்து விட்டு கதை வேறு எங்கோ சென்று விட்டது என பார்க்கின்றீர்களா? இந்த உப்பு என அழைத்தது நாம் வயலிலிடும் அசேதனப் பசளைகளைத்தான். யூரியா, பொசுபேற்று மற்றும் பொட் டாசு என்பன எமது நிலத்தை பாழ டையச் செய்துவிட்டன என்றால் யாராலும் நம்பமுடிகின்றதா?


ஊறுகாய்க்கும் கருவாட்டுக்கும் உப்புத்தடவுவது எதற்காக? உப்பின் செறிவு அதிகரித்தால் அந்த கார ஊடகத்தில் நுண்ணங்கிகள் வாழமாட் டாது. அதனால் மண்ணில் அதிகள வில் உப்புக்களான அசேதன பச ளைகளை இடும் போது அதிலுள்ள நுண்ணங்கிகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு குறைவ டைந்து மண் உயிர்ப்பற்றதாக ஆகிவிடும். கருவாட்டில் உப்பின் செறிவு அதிகமாகி இருப்பதால் நுண்ணங்கிகளின் தாக்கம் மட்டுப் படுத்தப்பட்டு அது பழுதடையாது நீண்ட நாட்களுக்கு பாதுகாக்கப்ப டுவது போல மண்ணிலும் தேவை யற்ற உப்பினளவு அதிகரிக்கும் போது அதிலுள்ள நன்மை தரும் நுண்ணங்கிகளின் எண்ணிக் கையும் வெகுவாகக் குறைவடை ந்து விடும்.

இதன் மூலமாகத்தான் எமது மண்ணிலும் உயிர்ப்பு குறைந்து பயிர்கள் சூழலிலேற் படுகின்ற மாற்றங்களுக்கு தாக் குப்பிடிக்க முடியாமல் விளைச்ச லில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு விடுகின்றன.

ஆக மொத்தத்தில் உப்பின் அளவு கூடக்கூட நன்மை தருகி ன்ற நுண்ணங்கிகளின் அளவு குறைக்கப்பட்டு விடும் என்பது இதிலிருந்து புரிகின்றதல்லவா. சேதனமுறை மூலமாக பயன்ப டுத்தும் அசேதன பசளைகளின் அளவினை இல்லாமல் செய்யும் போது மண்ணில் நன்மைதரும் நுண்ணங்கிகளின் அளவு அதிக ரித்து, அது பயிரின் வேர்த்தொகு திக்கு காப்பரணாக வேர்த் தொகுதி யின் விருத்திக்கு உந்துசக்தியாக இருக்கும். இந்த விடயத்தைசரி வர நாம் புரிந்துகொண்டால் எமது பயிர்ச்செய்கையை மேலும் கட்டிக்காக்க முடியும்.

இதற்கு பல விவசாயப் பெரு மக்கள் சான்றாக இருக்கின் றார்கள். முயற்சி திருவினை யாக்கும். எதற்கும் எம்மிடம் அனைவரும் எதிர்பார்க்கின்ற மாற்றம் வேண்டும். என்றோ ஒருநாள் இந்த மாற்றம் எம் மண்ணிலும் நடைபெறும் என எழுதும் இக்கைகள் நம்பிக்கை யோடு எதிர்பார்த்திருக்கின்றன.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 173








சாவகச்சேரி பொது மைதானத்தில் கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமையும் 28 ஆம் திகதி வியாழக்கிழமையும் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொசன் நிகழ்வில் 523 ஆவது மற்றும் 52 ஆவது படையணியினரால் மதம் சார்ந்த காட்சிப் பொருட்கள் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன. இந் நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டதுடன், இராணுவத்தினரின் இராப்போசன விருந்திலும் கலந்து கொண்டனர். (படங்கள்:- சுபேசன்)

# ஜனாதிபதித் தேர்தல் செலவுக்காக மகிந்த சீனாவிடம் பெற்ற நிதி ஐக்கிய அரபு எமிரேட்ஸில்

## திலக் மாரப்பன தீவிர விசாரணை



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சீனாவிடம் இருந்து பெறப்பட்ட நிதியை, மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வைப்பில் இட்டுள்ளாரா என்று அந்த நாட்டு அரசாங்கத்திடம் இலங்கை அர்சாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசாங்கத்திடம், இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக விசாரித்துள்ளார் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தகவல் வெளியிட்டுள்ளார்.

"நம்பகமான தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த விவகாரத்தை இலங்கை அரசு எழுப்பியுள்ளது.

ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக்கு சீனாவிடம் இருந்து 7.6மில்லியன் டொலர் கிடைத்ததாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டதன் பின்னர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அந்தப் பணம் வைப்பிலிடப்பட்டது பற்றிய தகவல் இலங்கை அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைட்டம் மருத்துவபீட மாணவர்கள் கொத்தலாவல பல்கலைக்கு மாற்றம்

## சபாநாயகர் அங்கீகாரம்

(கொழும்பு)

சைட்டம் நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவ பீட மாணவர்களை சேர். ஜோன் கொத்தலாவெல பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்வதற்கான சட்டமூலத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டுள்ளார்.

அதன்படி, சைட்டம் மாணவர்களை கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டது.

சைட்டம் வைத்திய கல்லூரியில் கல்வி கற்ற 982 மாணவர்களை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பான விசேட சட்டமூலமானது, திருத்தங்களுடன் நாடாளுமன்றில் கடந்த 20ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த சட்டமூலத்தில் கையெழுத்திட்டு சபாநாயகரும் அதனை அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹிட்லருக்கும் கோத்தாவுக்கும் பிரஜாவுரிமையில் ஒற்றுமை

## அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லருக்கும் இடையில் ஒற்றுமைகள் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கோத்தபாயவிற்கும் ஹிட்லருக்கும் இடையில் ஒற்றுமைகள் இருப்பதாக நான் கருதுகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது ஒற்றுமை இருவரும் சைவஉணவை மாத்திரம் சாப்பிடுபவர்கள் என்பது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஹிட்லர் ஜேர்மனியின் பிரஜாவுரிமையை கொண்டிருக்கவில்லை. கோத்தபாயவிற்கு இலங்கை பிரஜாவுரிமை கிடையாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஹிட்லர் அவுஸ்திரேலிய பிரஜாவுரிமையை கொண்டிருந்தார். அவர் ஜேர்மனியின் பிரஜாவுரிமையை பெறுவதற்கு பல முயற்சிகளில் ஈடுபட்டார் என தெரிவித்துள்ள அமைச்சர் ஜேர்மனியின் பிரஜாவுரிமையை பெறாமல் ஜேர்மனியின் ஜனாதிபதியாக முடியாது என்பதாலேயே ஹிட்லர் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

கோத்தபாயவிடமும் இலங்கை பிரஜாவுரிமை இல்லை. அவர் அமெரிக்க பிரஜாவுரிமையை கொண்டுள்ளார். இதன் காரணமாக அவருக்கும் ஹிட்லருக்கும் ஒற்றுமையுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த சொன்னால் எதையும் செய்வோம்

## ரி.பீ. ஏக்கநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென 16 பேர் கொண்ட குழு அறிவித்துள்ளது.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அக்குழுவின் உறுப்பினர் ரி.பீ. ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

தமக்கு இரண்டு தீர்மானங்களில் கால் வைத்திருக்க முடியாது. கூட்டு எதிரணியில் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளோம். பொதுஜனபெரமுனவில் இணையுமாறு மகிந்த ராஜபக்ஷ கூறுவாராயின் நாம் இணைந்து கொள்ளத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள முக்கிய உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்திலிருந்து விலகுமாறும் 16 பேர் கொண்ட குழுவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் மேற்குலகின் தலையீடு பெரிதாக இருக்காது

## மகிந்த நம்பிக்கை



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மேற்குலகின் தலையீடுகள் அதிகமாக இருக்காது என்று எதிர்வு கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் பதவிக்கு வந்த பின்னர் அமெரிக்காவின் கொள்கைகளில் மிகப் பாரிய மாற்றங்கள் செய்யப்படவில்லை.

அவர்களின் வெளிவிவகாரக் கொள்கைகள் சமமானதாகவே உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அண்மையில் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப்புடனான சந்திப்புத் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மகிந்த " நாங்கள்சந்தித்துக்கொண்டோம். தூதுவர்ஒருவர்தனது பணியை முடித்துக் கொண்டு நாட்டை விட்டு வெளியேறும் போது, மரியாதை நிமித்தமாக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி தலைவர்களைச் சந்திப்பது வழக்கம். இது ஒரு வழக்கமான சந்திப்பு மட்டுமே" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை-அமெரிக்க பல்கலைகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை

(கொழும்பு)

விவசாயத்துறையில்தொழில்நுட்ப புரிந்துணர்வினை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அமெரிக்கா மேச்சனட் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடவுள்ளது.

இதன்மூலம் விவசாயத்துறையில் ஆய்வு மற்றும் கல்வி தொடர்பான தகவல்களை பரிமாறிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இதேபோன்று கொழும்பு, பேராதனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் விவசாய ஆய்விற்கான வசதிகளையும் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நுவரெலியாவில் இன்று தேசிய அறநெறி விழா

(ஹற்றன்)

இந்துசமய அறநெறிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்கோடு இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதம், இந்து சமய அறநெறிக் கல்விக் கொடிதினம் ஆகியன "இளஞ்சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அறநெறிக் கல்வி தேவையென உணர்வீர்" எனும் தொனிப்பொருளில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசைத் தினமாகிய மே மாதம் 31 ஆம் திகதியை ஆரம்ப நாளாகக்கொண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தேசிய அறநெறி விழாவாக நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்துசமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதத்தின் இறுதி நிகழ்வு நுவரெலியா மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் "தேசிய அறநெறி விழா -2018" மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு செயலாளர் எந்திரி கலாநிதி பொ. சுரேஷ் தலைமையில், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

அறநெறிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விழிப்புணர்வுப் பேரணி, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூஜை நிகழ்வு, இந்துசமய அறநெறிக்கல்விக் கொடிதின நிகழ்வு, இலங்கையில் இந்து சமய அறநெறிக் கல்வியை மேம்படுத்தி விரிவாக்குவதன் அவசியம் தொடர்பான கருத்துரைகள், அறநெறிப்பாடசாலை மாணவர்களின்,கலை நிகழ்வுகள் ஆகியன நுவரெலியா ஆவேலியா ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மணிமண்டபத்தில் நடைபெறும். (இ-7)

# மாத்தறையில் துப்பாக்கிச்சூடு வசந்தவின் மனைவி கைது!

## துப்பாக்கியும் மீட்பு

(மாத்தறை)

மாத்தறை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஹபரகட வசந்தவின் மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான்குணசேகர தெரிவித்தார்.

மாத்தறையில் கடந்த 22 ஆம் திகதி நகையகமொன்றில் கொள்ளையிட வந்த கும்பலுக்கும் பொலிஸாருக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி பொலிஸ் அதிகாரியொருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந் நிலையில் ஹோமாகமவிலுள்ள இச் சம்பவத்துடன் தொடர்புடையவரான ஹபரகட வசந்தவின் வீட்டில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனையின் போது ரிவோல்வர் துப்பாக்கியையும், துப்பாக்கி ரவைகளையும் கைப்பற்றியுள்ளதுடன் வசந்தவின் மனைவியையும் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# பாரதம்

## இராமேஸ்வரத்தில் கண்டெடுக்கப்பட்ட வெடிபொருட்களை உடன் அழிக்க வேண்டும்

### பொது மக்கள் கோரிக்கை



(இராமேஸ்வரம்)

குடியிருப்பு பகுதியில் இருந்து உடனே வெடி பொருட்களை அகற்றி ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும். மேலும் இதனை உட்னே செயலிழக்கவோ, அழிக்கவோ வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே உள்ள தங்கச்சிமடத்தில் எடிசன் என்பவரது வீட்டுத் தோட்டத்தில் தோண்டிய போது பயங்கர வெடிபொருட்கள், தோட்டாக்கள், கண்ணிவெடிகள் என ஆயிரக் கணக்கில் கண்டெடுக்கப் பட்டன.

இதனை மத்திய வெடி பொருட்கள் தடுப்பு பிரிவினர் ஆய்வு செய்தனர். பெரும் பாலும் நல்ல நிலையில் உள்ள இவைகள் வெடித்திருந்தால் பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என வெடிபொருள் நிபுணர்கள் தெரிவித்தனர்.

கண்டெடுக்கப்பட்ட வெடி பொருட்கள், தோட்டாக்கள், குண்டுகளை இராமேஸ்வரம் நீதவான் பாலமுருகன் ஆய்வு செய்தார்.

அதன் விபரங்களை கேட்டறிந்த நீதவான், கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களின் எண்ணிக்கை குறித்து தெரிவிக்குமாறு கூறினார். மேலும் மறு உத்தரவு வரும் வரை வெடிபொருட்களை பாதுகாப்பாக வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து தோட்டாக்களை மட்டும் பொலிஸார் ராமநாதபுரம் ஆயுதப்படை மைதானத்துக்கு கொண்டு சென்றனர். மற்ற ஆபத்தான வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளன. அங்கு 6 துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கண்டெடுக்கப்பட்ட வெடி பொருட்களை உடனே அங்கிருந்து அப்புறப்படுத்தாமல் தங்கச்சிமடம் குடியிருப்பு பகுதியிலேயே வைக்கப் பட்டுள்ளது பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. வெடிபொருட்கள் வெடித்தால் பயங்கர விளைவுகள் ஏற்படும்.

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் உள்ள இந்த பகுதியில் இருந்து உடனே வெடிபொருட்களை அகற்றி ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும். மேலும் இதனை உடனே செயலிழக்கவோ, அல்லது அழிக்கவோ வேண்டும்என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7)

## எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் சிறுவனுக்கு பரிசுகள் கொடுத்து அனுப்பிய இந்திய இராணுவம்



(ஜம்மு)

பாகிஸ்தான் எல்லையில் இருந்து வழிதவறி இந்திய எல்லைக்குள் நுழைந்த சிறுவனுக்கு இந்திய இராணுவத்தினர், பரிசுகள் வாங்கி கொடுத்து பத்திரமாக வழி அனுப்பிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சில பகுதிகளை பாகிஸ்தான் இராணுவத்தினர் கைப்பற்றி தங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்துள்ளனர்.

இந்நிலையில், பாகிஸ்தான் ஆக்கிமிரப்பு காஷ்மீர் பகுதியில் இருந்து கடந்த 24 ஆம் திகதி மொகமது அப்துல்லா என்னும் 11 வயது சிறுவன் ஒருவன் வழிதவறி, இந்திய கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீர் பகுதிக்குள் நுழைந்துவிட்டான். இந்த சிறுவனை இந்திய பாதுகாப்பு படையினர், காஷ்மீர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந்த சிறுவனை பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைக்க தேவையான ஏற்பாடுகளை காஷ்மீர் பொலிஸார் செய்தனர். கடந்த 3 நாட்களாக காஷ்மீர் பொலிஸாரிடம் இருந்த சிறுவனை பாகிஸ்தான் அதிகாரிகளிடம் முறைப்படி இந்திய இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

அந்த சிறுவனை ஒப் படைக்கும் போது, அவனுக்கு புதிய ஆடைகள், இனிப்புகள் மற்றும் விளையாட்டு பொருட்களை வாங்கி கொடுத்து இந்திய இராணுவத்தினர் பத்திரமாக வழி அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் அனைவர் மனதிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (7)

## அமெரிக்க செய்தி நிறுவனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய இளைஞர் கைது

(மேரிலேண்ட்)

அமெரிக்காவில் பத்திரிகை அலுவலகத்தில் புகுந்து 5 பேரை சுட்டுக் கொன்ற வாலிபரை பொலிஸார் கைது செய்தனர்.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில் உள்ள அன்னா பொலிஸ் நகரில் 'கேபிட்டல்' பத்திரிகை அலுவலகம் உள்ளது. நேற்று முன்தினம் மதியம் அங்கு ஒரு மர்ம வாலிபர் புகுந்தார். செய்தி அறை பகுதிக்குள் நுழைந்த அவர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் கண்ணாடி கதவு வழியாக சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார்.

இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. என்ன நடக்கிறது என தெரியாமல் திகைத்த ஊழியர்கள் உயிர் பிழைக்க அங்குமிங்கும் ஓடி பதுங்கினர்.

இந்த துப்பாக்கி சூட்டில் 5 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அங்கு விரைந்து வந்து துப்பாக்கியால் சுட்ட மர்ம நபரை தேடினர். பின்னர் 60 விநாடிகளில் பத்திரிகை அலுவலகத்தில் பதுங்கியிருந்த வாலிபரை பிடித்து கைது செய்தனர். (7)

## சர்வதேச அளவில் (

## கொல்லப்படும் விகி

### ஐ.நா.அறிக்கையி

(வோஷிங்டன்)

அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு நடத்திய ஆய்வு ஒன்றில், மோதல் களினால் குழந்தைகள் அதிகளவில் கொல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் உள் நாட்டு போர்களும், பயங்கரவாத எதிர்ப்பு போர்களும் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

ஒரு காலத்தில் இந்தியாவில் மட்டுமன்றி, உலக நாடுகள் அனைத்திலும், சிறிய மோதல் ஏற்பட்டால் கூட பெண்களையும் குழந்தைகளையும் காப்பதும், அவர்களை கொல்லாது இருப்பதுமே வீரமாக கருதப்பட்டது.

ஆனால், இந்த மரபை மாற்றி எழுதும் வகையில், ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் வெளியிட்டுள்ள அறிக்கை




அமைந்துள்ளது.

சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், பல்வேறு கலவரங்களில், மோதல்களில் கடந்த ஒரு ஆண்டில் மட்டும் சுமார் 10 ஆயிரம் குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சுமார் 8 ஆயிரம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராளிகளாக தங்களை மாற்றிக் கொண்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிறுவர்களும், சிறுமிகளும் நீண்ட வன்முறை நெருக்கடி காரணமாக அதிக அளவில் பாதிக்கப்படுவதாக

## எண்ணெய்த்தாங்கி பௌசரில் தீ! ஒன்பது பேர் பரிதாபமாகப் பலி



(லாகோஸ்)

நைஜீரியாவின் லாகோஸ் நகரில் எண்ணெய் ஏற்றி வந்த டாங்கர் லொறியில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி ஒன்பது பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் லாகோஸ் நகரில் நேற்று மாலை ஒரு எண்ணெய் டாங்கர் லொறி சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த லொறி எதிர் பாராத விதமாக விபத்துக்குள்ளானது. இதையடுத்து அந்த லொறியில் இருந்து எண்ணெய் வெளியே கசிய தொடங்கியது.

சிறிது நேரத்தில் தீப்பிடித்தது. அந்த தீ அருகில் இருந்த வாகனங்களுக்கும் வேகமாக பரவியது. இந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் நான்கு பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் 5 பேருந்துகள், 2 ட்ரக் மற்றும் 45 கார்கள் தீக்கிரையாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டாங்கர் லொறியின் பிரேக்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்பட்டுள்ளது. (7)

## செய்தி நிறுவனத்தில் துப்பாக்கிச்சூடு ஐந்து பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மேரிலேண்ட் பகுதியில் உள்ள கேப்பிட்டல் என்னும் தனியார் செய்தி நிறுவனத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஐந்து பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் மேரிலேண்ட் மாகாணத்தின் அன்னாபோலிஸ் பகுதியில் 'கேப்பிட்டல் எனப்படும் தனியார் செய்தி நிறுவனத்தின் அலுவலகம் செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம்மதியம்அப்பகுதிக்கு வந்த ஒரு நபர் அலுவலகத்திற்குள் நுழைந்து அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் ஐந்து பேர் உயிரிழந்ததாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.



துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் யார்?, எதற்காக துப்பாக்கிச்சூடு நடத்தினார்? என இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

செய்தி நிறுவனத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (7)



# வெளிநாடு

# குழந்தைகள்
# தம் அதிகரிப்பு
## இல் தகவல்

வும், இதனை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் இருந்தாலும் அதிகரித்துள்ள வன்முறையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது இந்தியா உட்பட சுமார் 20 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. 9 அரசு படைகளும், 57 ஆயுதம் ஏந்திய குழுக்களும் என மொத்தம் 66 குழுக்கள் மோதல்களில் ஈடுபடுவதாக ஐ.நா. வல்லுநர் விர்ஜினியா கம்பா தெரிவித்துள்ளார்.

மத்திய ஆப்ரிக்க குடியரசு, கொங்கோ, மியன்மார், தெற்குசூடான், சிரியா,

உபயோகிக்கப்பட்ட மோசமான நிகழ்வை அதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டினார்.

ஈராக் நாட்டில் பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாக ஆயிரம் குழந்தைகள் கைது செய்யப்பட்ட நிகழ்வை சுட்டிக்காட்டி பேசிய கம்பா, இதுபோன்று சந்தேகத்தின் அடிப்படையில் குழந்தைகள் கைதாவது குறித்தும் தாம் கவலை அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பாக பேசிய ஐ.நா.பொதுச் செயலாளர், அனைவரும் ஒன்றிணைந்து இந்த வன்



ஏமன் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட மோதல்களிலேயே அதிக அளவில் குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பதாக கூறிய அவர், நைஜீரியாவில் மனித வெடிகுண்டுகளாக குழந்தைகள்

முறையை போக்குவதற்கு அமைதியை பரப்ப வேண்டும் எனவும், வன்முறையில் இருந்து மீள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (7)

# அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டாம்

### ஹார்லிடேவிட்சன் நிறுவனத்துக்கு ட்ரம்ப் வலியுறுத்து



(வோஷிங்டன்)

இருமுனை வரி நெருக்கடியால் அமெரிக்காவை விட்டு வெளியேற முடிவெடுத்துள்ள ஹார்லி டேவிட்சன் நிறுவனத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு எதிராக உலக நாடுகள் வர்த்தக போரை தொடங்கியுள்ளன. இந்தியாவும், சீனாவும் தற்போது வர்த்தக அளவில் ஒன்றாக செயற்படும் வகையில் வரிகளை குறைப்பதாக அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றன. அதோடு அமெரிக்க பொருட்கள் மீதான வரிகளை அதிகரித்துள்ளன. இதனால் அமெரிக்க நிறுவனங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உலகின் முன்னணி இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனம் ஹார்லி டேவிட்சன், அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயற்பட்டு வரும் இந்நிறுவனம், இரும்பு, அலுமினியம் போன்ற மூலப்பொருட்களுக்கு அதிக வரி செலுத்தி இறக்குமதி செய்கிறது. தற்போது தயாரித்த இருசக்கர வாகனங்களை ஏற்றுமதி செய்ய கூடுதல் வரியை செலுத்த வேண்டிய நிலை அந்நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது. இருமுனை வரி நெருக்கடியால் ஹார்லி டேவிட்சன் நிறுவனத்திற்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவில் இருந்து ஹார்லி டேவிட்சன் நிறுவனம் வெளியேறக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார். அந்த நிறுவனத்திற்காக அமெரிக்க அரசு நிறைய செய்துள்ளதாகவும் அவர் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ட்ரம்பின் கோரிக்கையை ஹார்லி டேவிட்சன் நிறுவனம் மறுபரிசீலனை செய்ய தயாராக இல்லை என கூறப்படுகிறது. (7)

# பெற்றோரிடமிருந்து குழந்தைகள் பிரிப்பு
# ட்ரம்புக்கு எதிராக போராட்டம்; 500க்கு மேற்பட்டோர் கைது

(வோஷிங்டன்)

சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்தவர்களை குடும்பத்தோடு கைது செய்து சிறையில் அடைக்கும் ட்ரம்ப் உத்தரவுக்கு எதிராக செனட் சபை கட்டடம் முன் போராட்டம் நடத்திய 575 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவுக்குள் எல்லை வழியாக சட்டவிரோதமாக குடியேறுபவர்களை கட்டுப்படுத்தும் வகையில் அகதிகளின் குழந்தைகளை அவர்களிடம் இருந்து பிரித்து வைக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் உத்தரவிட்டார்.

குழந்தைகளுடன் அமெரிக்காவுக்குள் வருபவர்களை பிடித்தால் குடியுரிமை சட்டத்தை மீறியதாக குழந்தைகள் மீது குற்றவியல் வழக்குப்பதிவு செய்ய சட்டத்தில் இடமில்லை என்பதால் பெற்றோர்களிடம் இருந்து குழந்தைகளை பிரித்து எல்லையோரங்களில் உள்ள பிரத்தியேக காப்பகங்களில் வைக்கப்படுகின்ற சூழல் உருவாகியது.

இந்த புதிய உத்தரவு அமுலுக்கு வந்த கடந்த



ஏப்ரல் மாதம் 19ஆம் திகதியில் இருந்து மே மாதம் தொடக்கம் வரை எல்லை வழியாக அத்துமீறி அமெரிக்காவுக்குள் நுழைந்ததாக 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடியேறிகள் எல்லை காவல் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களுடன் வந்த சுமார் 2,300 சிறுவர், சிறுமியர் தங்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு காப்பகங்களில் வைக்கப்பட்டுள்ளனர். இது உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்பு வந்ததை அடுத்து, குழந்தைகளை அகதிகளிடம் இருந்து பிரிக்கும் உத்தரவை ட்ரம்ப் ரத்து செய்தார். இருப்பினும், இன்னும் பல குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவில்லை. இதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 10 நாட்களுக்குள் குழந்தைகள் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், சட்டவிரோத குடியேறிகளை குடும்பத்தோடு கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கும் நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் அமெரிக்க செனட் சபை கட்டடம் முன் கூடிய நூற்றுக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் ட்ரம்பின் உத்தரவிற்கு எதிராக முழக்கமிட்டனர்.

இதையடுத்து அவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியும் அவர்கள் அங்கிருந்து கலைந்து செல்ல மறுத்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வேறு வழியின்றி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்தனர். (7)

# இந்தோனேஷியாவில் ஆகங் எரிமலை குமுறல்; சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டது

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் பாலி நகரில் ஆகங் எரிமலையில் இருந்து சாம்பல் வெளியேறிய நிலையில் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டது.

இந்தோனேஷியாவின் வடகிழக்கில் ஆகங் எரிமலை கடந்த வருடத்தில் இருந்து குமுறி கொண்டு இருந்துள்ளது. இதனால் கடந்த டிசெம்பரில் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டது. அதனை சுற்றியிருந்த ஆயிரக்கணக்கானோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில், எரிமலையில் இருந்து 8,200 அடி உயரத்திற்கு சாம்பல் புகை பரவி சென்றது. இதனை தொடர்ந்து செந்நிறத்தில் நெருப்பும் காணப்பட்டது.

இதனால் சர்வதேச விமான நிலையம் நேற்று மூடப்பட்டது. 48 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 38 சர்வதேச விமானங்களும் மற்றும் 10 உள்நாட்டு விமானங்களும் அடங்கும். விமான சேவை ரத்து செய்யப்பட்ட நிலையில் 8,334 பயணிகள் பாதிப்படைந்துள்ளனர். (7)



# செய்தி நிறுவனம் மீது துப்பாக்கிச்சூடு வெள்ளை மாளிகை கடும்கண்டனம்

(வோஷிங்டன்)

மேரிலேண்ட் மாகாணத்தில் செய்தி நிறுவனத்திற்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு வெள்ளை மாளிகை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தின் அன்னாபோலிஸ் பகுதியில் கேப்பிட்டல் கெஜட் தனியார் செய்தி நிறுவனத்தின் அலுவலகம் செயற்பட்டு வருகிறது. நேற்று மதியம்



அலுவலகத்திற்குள் நுழைந்த நபர், அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய நபர், செய்தி நிறுவனத்திற்கு தொடர்புடைய ரமோஸ் என்பதும், செய்தி நிறுவனம் மீது அவர் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால் கடும் ஆத்திரத்தில் இருந்ததும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு வெள்ளை மாளிகை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அப்பாவி பத்திரிகையாளர்கள் பணியில் இருந்த போது நடத்தப்பட்ட தாக்குதலானது, ஒவ்வொரு அமெரிக்கர் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் ஆகும். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் நண்பர்கள், உறவினர்களுக்காக பிரார்த்தனை செய்கிறோம்' என வெள்ளை மாளிகை ஊடகப் பிரிவு செயலாளர் சாரா டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (7)

சர்வதேச குற்றவாளிகளுடன் தொடர்பு

# உதயங்க விவகாரம்; மகிந்தவிற்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்

## துமிந்த வலியுறுத்து

(கொழும்பு)

சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வரும் சந்தேக நபரான ரஷ்யாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவை தன்னால் நாட்டுக்கு அழைத்து வர முடியும் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமையானது அவர் மீது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இவரது கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச பொலிஸாரின் சிவப்பு அட்டை விடுத்து தேடப்படும் உதயங்க வீரதுங்க, தான் கூறினால் வருவார் என்றும் அவரது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒரு வழிமுறைகளை ஏற்படுத்தி விட்டு ஒரு மாத காலத்திற்குள் இலங்கைக்கு வருவார் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமையின் ஊடாக பாரிய உண்மை வெளிப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளில் தேடப்படும் குற்றவாளிகளுக்கும் தனக்கும் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டு வருகின்றது என்று அவரே ஒப்புக் கொண்டுள்ளார்.

உதயங்க வீரதுங்கவை நாட்டுக்கு மீண்டும் கொண்டு வர அரசாங்கம் சட்டத்தின் பிரகாரம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மறுபுறம் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனையும் நாட்டுக்கு கொண்டு வரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருவரும் சட்டத்தின் பார்வையில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவேண்டிய சந்தேக நபர்களாகவே காணப்படுகின்றனர்.

மிக் விமான கொள்வனவு மோசடியில் முக்கிய நபராக கருதப்படும் உதயங்க வீரதுங்க அந்த மோசடியுடன் தொடர்புபட்டவர்களுடன் இன்றும் தொடர்புடையவர்களாகவே காணப்படுகின்றனர் என்ற விடயம் தற்போது அம்பலமாகியுள்ளது.

உதயங்க வீரதுங்க தொடர்பில் இதுவரை காலமும் மௌனம் காத்த மகிந்த ராஜபக்ஷ குற்றவாளிக்கும் தனக்கும் இதுவரை காலமும் யாரும் அறியாத தொடர்பு காணப்படுகின்றது என்ற விடயத்தினை குறிப்பிட்டுள்ளமை வரவேற்கதக்கது. இனியாவது நாட்டு மக்கள் உண்மை நிலையினை அறிந்துக் கொள்ள வேண்டும்.

குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதனுடன் தொடர்புடைய குற்றவாளிகளே அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றனர். ஆகவே, மகிந்தவின் கருத்து தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார் (இ-7)

# விசேட அதிரடிப்படையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் பிரதி அமைச்சர்

(கொழும்பு)

பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும விசேட அதிரடிப்படையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம். ஆர். லத்தீப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சூரியவெவ பிரதேசத்தில் அமைச்சர் பாலித தேவரப்பெருமவிற்கும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்த விடயம் குறித்து பிரதி அமைச்சர் தம்மிடம் முறைப்பாடு செய்ததாகவும் அதன் போது படையினர் தங்களது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதாக கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.



சட்டவிரோத மணல் அகழ்வுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது தொடர்பில் இந்த முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருந்தது.

பிரதி அமைச்சரே தமது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லத்தீப் தெரிவித்துள்ளார். (இ-7)

# ரவி கருணாநாயக்கவின் குற்றச்சாட்டை நிரூபிக்க எந்த சாட்சியங்களும் இல்லை

## மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட துணை ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு எதிராக முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஊடகங்கள் வழியாக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கக் கூடிய எந்த சாட்சியங்களும் முன்வைக்கப்படவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட துணை ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு எதிராக முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார்.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் என்ற வகையில் இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக எதனையும் கூறவேண்டியதில்லை.

சிறந்த பொருளாதார நிபுணரான கலாநிதி வீரசிங்க, நான் ஆளுநராக பதவி வகித்து வரும் கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய வங்கியின் பணிகள் சம்பந்தமான நடவடிக்கைகளில் விசேட பங்களிப்பை வழங்கி வரும் அதிகாரியாவார்.



முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் எந்த சாட்சியங்களையும் முன்வைக்கவில்லை என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புவதாகவும்" இந்திரஜித் குமாரசுவாமி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலஞ்சம்; மின்சார சபை ஊழியர் கைது

(கொழும்பு)

பொலநறுவை, பகமூன பகுதியில் மின்சார சபை கிளைக் காரியாலயமொன்றில் பணிபுரியும் மின்சார சபை ஊழியர் வீடொன்றுக்கு சட்டவிரோதமாக வழங்கப்பட்ட மின் இணைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் இருக்க இலஞ்சம் பெற்ற போது நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பொலநறுவை பகமூன பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் வீட்டுக்கு மின்னிணைப்பை பெற்றுக் கொண்ட நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமலிருக்க இவ்வாறு குறித்த அதிகாரி இலஞ்சம் பெறமுனைவதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் இவரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரை ஹிங்குராங்கொட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# கண்டிப்பையும் அன்பையும் கலக்கும் விதம்

"செல்லம் கொடுத்தே குட்டிச்சுவராக்கிப்பிட்டே இவளை" என்று சிலர் சொல்லுவதுண்டு. எதுக்கெடுத்தாலும் கண்டிச்சுக் கண்டிச்சு வீணாக்கிட்டே அவனை என்கிற குற்றச்சாட்டு மறுபுறம் எழுவதும் உண்டு.

உப்பும் காரமும் சரிவரக் கலக்கப்படாத குழம்பு குப்பைத் தொட்டிக்குப் போய்விடுகிற மாதிரித்தான் இதுவும்.

பிள்ளைகளானாலும் சரி, நம்மிடத்தில் பணி புரிகிறவர்களானாலும் சரி, நம் குடும்ப உறுப்பினர்களினாலும் சரி, நம்மீது பிரியமும் இருக்கவேண்டும், மரியாதையும் முடிந்தால் சற்று நியாயம் கலந்த பயமும் இருக்க வேண்டும். இந்த விகிதாசாரம் சரிவர அமையாவிட்டால் வீண்தான்.

ஒரேடியான பயம் நம்மை மற்றவர்களிடமிருந்து பிரித்துவிடும். ஒரேடியான (செல்லம்) உரிமை நம் தலைமீது மிளகாய் அரைக்கச் சொல்லும். இரண்டுமே நல்லதல்ல. ஏற்காட்டில் உள்ள ஒரு புகழ்மிக்க பள்ளியின் விடுதிக் காப்பாளரிடம் பேசிக் கொண்டிருந்தேன். இவரை ஒரு வெற்றிகரமான விடுதிக் காப்பாளர் என்று பலரும் சொல்லவே இதற்கு என்ன காரணம்? என்று கேட்டேன்.

அவர் சொன்னார் அடிப்படையில் பிள்ளைகள் என்றாலே எனக்குப் பிடிக்கும். அவர்களைத் தண்டிக்கவும் அடிக்கவும் கூடச் செய்வேன். ஆனால், நாம் தவறு செய்தால்தான் நமக்குத் தண்டனை. அனாவசியமாகத் தண்டிக்கிற மூர்க்க மனிதரல்லர் இவர். சரிவர நடந்து கொண்டால் மனதில் இடம் பிடிக்க முடியும். யாராலும் எளிதில் இடம்பிடிக்க முடியாத இவரது இதயத்தில் எப்படியாவது இடம் பிடிக்க வேண்டும். அப்படி இடம் பிடித்து விட்டால் மற்ற சக மாணவ மாணவிகள் மத்தியில் நமக்குப் பெருமை என்றெல்லாம் அவர்களை மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வைத்திருக்கிறேன். எனவேதான் எனக்கு நீங்கள் இப்படி விசாரிக்குமளவு நல்ல பெயர். எதற்குத் தண்டிப்பார், எதற்குத் தட்டிக் கொடுப்பார் என்பது மாணவ மாணவிகளுக்குப் புரியாவிட்டாலோ நாமே ஒரு குழப்பமான மன நிலையுடன் அவர்களை அணுகினாலோ, அவர்களுக்கு ஒன்றுமே புரியாது. அவர்களுடைய செயற்பாடுகளிலும் முரண்பாடுகள் பிரதிபலிக்க ஆரம்பிக்கும் என்று முடித்தார். நல்ல விளக்கமாகப் பட்டது எனக்கு.

எதற்கெடுத்தாலும் கண்டித்துக் கண்டித்தே வளர்த்தால் நாம் என்ன செய்தாலும் அடியும் திட்டும்தான் மிஞ்சும் என்று புரிந்து கொள்ளுபவர்கள், எந்த ஆற்றலையும் வெளிப்படுத்த இயலாதவர்களாகி வீணாய்ப் போய்விடுகிறார்கள்.

அதிகமாகச் செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளைகள் உருப்பட்டதாக வரலாறு ஏதும் இருந்தால் சொல்லுங்கள்!

**லேனா தமிழ்வாணன்**

# சந்தேகம் ஏற்பட்டால் உடன் சுடு! மகிந்த ஆட்சியில் இதுதான் நடந்தது

## விக்கிரமபாகு சுட்டிக்காட்டு



(கொழும்பு)

குற்றவாளிகளுக்கு தண்டனை அளிக்கும் நடைமுறையை நாட்டின் சட்டவரம்பிற்கும், ஜனநாயக வரம்புகளுக்கும் உட்பட்டவாறு அரசாங்கம் முன்னெடுப்பதாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

திருடர்களை பிடித்தல் என்பது, எவர் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால், துப்பாக்கியை கொண்டு சென்று அவரை சுட்டுக் கொல்வதல்ல. அதைத்தான் முன்னைய ஆட்சியாளர்கள் செய்தார்கள் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

சட்டவரம்புகளுக்கு உட்பட்டவாறு சந்தேகநபர்களுக்கு முறையாக வாய்ப்பளித்து, யார் குற்றவாளி என்பதை தீர்மானிப்பது அவசியம். தற்போது உரிய நடைமுறைகள் அனுசரிக்கப்படுகின்றன.

பலர் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். இந்த நடைமுறைகள் சரியாக பூர்த்தியடைய கால அவகாசம் தேவை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைச் செய்தி மக்களை தவறாக வழி நடத்தும் முயற்சி

## மகிந்த அணி உறுப்பினர் பீரிஸ் கொதிப்பு



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட 7.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள், மக்களை தவறாக வழிநடத்தும் ஒரு முயற்சி என முன்னாள் அமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறைக்கவே, தேர்தல் முடிந்து மூன்றரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தற்போது இவ்வாறான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முன்வைப்பதாகவும் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில்கடன் கொடுத்து, நாட்டின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை சீனா கட்டுப்படுத்த முயன்றதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானவை என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஊடகங்களில் வெளியாகும் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான, தகுந்த ஆதாரங்களை முன்வைக்க தான் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பராக்கிரம சமுத்திரத்திற்கு ஜனாதிபதி விஜயம்









(கொழும்பு)

பராக்கிரம சமுத்திர பகுதியில் இடம்பெறும் சுற்றுச்சூழல் மாசடைவுகளை நிறுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் கண்டறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்தார்.

பராக்கிரம சமுத்திர பகுதியில் இடம்பெறும் சுற்றுச்சூழல் மாசடைவுகளை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அண்மையில் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருந்தார்.

இதற்கமையவே ஜனாதிபதியின் நேற்றைய விஜயம் இடம்பெற்றிருந்தது. (இ-7)







அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்னவின் மகன் தனுஷ்க செனவிரத்ன திருமண பந்தத்தில் இணைந்துள்ளார். அவர் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி பிரெட்மன் வீரகோனின் மகளை திருமணம் செய்து கொண்டுள்ளார். சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த திருமணத்தில் , இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கலந்து கொண்டனர். தனுஷ்க செனவிரத்ன நிறைவேற்று அதிகாரியாகவும், அவர் திருமணம் செய்து கொண்டவர் சட்டத்தரணியாகவும், பணியாற்றி வருகின்றனர். திருமண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது மனைவி மைத்திரியுடன் கலந்து கொண்டனர்.

# பிணைமுறி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் மாற்றம்

## சட்டமா அதிபர் நீதிமன்றில் தகவல்

(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தால் பிணைமுறி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர், நீதிமன்றத்துக்கு நேற்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அறிக்கை ஒன்றை பெறுவதற்காக, உரிய தொலைபேசி உரையாடல்களை சமர்ப்பித்து அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர்களுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணை மீண்டும் ஜூலை 20 ஆம் திகதி இடம்பெறும். (இ-7)

# பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதிதான் பொறுப்பு

## ரணில் எதிர்ப்புக்குழு மைத்திரி மீது முதல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பேற்க வேண்டுமென, அரசாங்கத்திலிருந்து விலகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணி தெரிவித்துள்ளது.


கொழும்பு - புஞ்சி பொரளையில் அமைந்துள்ள சுதந்திர ஊடகக் கேந்திர நிலையத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைச் சரிசெய்வதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்துத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும் அவ்வாறு இல்லாவிட்டால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, தேர்தலுக்குச் செல்லவேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை, ஆபத்தான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகக் கூறிய அவர், இதனால், எதிர்காலத்தில் நாட்டை ஆட்சி செய்பவர்களும், பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமென்றும் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக வர்க்களித்து அரசிலிருந்து வெளியேறிய 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை நேரடியாக விமர்சிக்காது தவிர்த்து வந்த நிலையில் முதன் முறையாக மைத்திரிபால சிறிசேன மீது முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் பாரிய குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

தேசிய அரசிலிருந்து விலகிய சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ள நிலையில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'தீகதந்து' கண்டுபிடிக்கப்பட்டது



(கொழும்பு)

கலாவாவி தேசிய பூங்காவில் வாழ்ந்து, கடந்த 10 நாட்களாகக் காணாமற் போயிருந்த, நீண்ட தந்தங்களையுடைய "தீகதந்து" எனப்படும் யானை, வன ஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் கண்டுபிக்கப்பட்டது.

கஹாகல்ல காட்டுப் பகுதியில் வைத்து, இந்த யானை கண்டுபிடிக்கப்பட்டதாக, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து, சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில் காணாமற் போன மேற்படி யானையைத் தேடி, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்துவரும் செயற்பாட்டிற்கு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பும், நேற்று முன்தினம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


### எண் 2 (சந்திரன்)
### (சமுதாயச் சிற்பிகள்)

எல்லோருடைய புகழ்ச்சிக்கும் மயங்கிவிடமாட்டார்கள். பிறருடைய புகழ்ச்சியை நல்லதா? கெட்டதா? என்று ஆராய்ந்து முடிவெடுப்பர். எல்லோருடைய புகழ்ச்சிக்கும் மயங்கி விடமாட்டார்கள். ஒருவருக்கு ஒரு உதவி செய்ய முடிவெடுத்து விட்டால் வெகு சுலபமாக செய்து முடிப்பார்கள். பலருடைய வாழ்க்கைக்கு ஒளியாக இருப்பார்கள். வயது ஏற ஏற வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டேயிருக்கும். மிக வேகமாக முன்னேற வேண்டுமென்று நினைத்து முன்னுக்குப் பின் முரணாகவே செயற்படுவார்கள. அழகு மாறாமல் கவர்ச்சியாகவே காட்சி யளிப்பார்கள். இவர்களின் உடலில் நீர்ச்சத்து மிகுந்து காணப்படும். சில நேரங்களில் தனிமையை விரும்புவார்கள். குடும்ப வாழ்க்கையை விட்டு விட்டு ஏகாந்த 'வாசத்தில் மூழ்கி விடுவார்கள். தனிமையில் அதிகமாக நடந்து கொண்டேயிருப்பார்கள்.

மனம் விரும்பும் பல உணர்ச்சிகளில் மயங்கிப் போவார்கள்.காதலின் புனிதத் தன்மையை மதிப்பார்கள். காதலுக்காக எதையும் துறந்து விடுவார்கள. மனதில் பரிவும் இளகிய குணமும் இருக்கும். தாய்மைக்குணமிருக்கும். தன்மானம் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் சுயமரியாதையை யாருக்காகவும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். தனிமையை பெரிதும் விரும்புவார்கள். ஏதாவது பழக்கத்தைப் பழகிவிட்டால் எளிதில் விடமுடியாமல் தவிப்பார்கள். இவர்கள் தீய பழக்கத்திற்கு அடிமையாகாமல் இருப்பது நல்லது.

உலக அளவில் எல்லா விடயங்களையும் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பார்கள். இவர்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை என்று கூறுமளவிற்கு அனைத்துத் துறைகளிலும் இவர்களின் ஆதிக்கம் நிறைந்திருக்கும். இவர்கள் முன்னேற பல சந்தர்ப்பங்கள் வலியவந்தடையும். எப்போதும் தூய்மையாகவே இருக்க விரும்பு வார்கள். அனைத்து நண்பர்களுடனும் மனமொன்றிப் பழகுவார்கள். இரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாதவர்கள். வெளிப்படையாகப் பேசிக்கொள்ள மாட்டார்கள். குழந்தைத் தனமிருக்கும். எதிலுமே திடமாக இருக்க விரும்பமாட்டார்கள. பிறர் தன்னைப் புகழ்ந்தால் எச்சரிக்கையுடன் செயற்படுவார்கள். மற்றவர்களை எளிதில் எடை போட்டு விடுவார்கள். நியாயமான காரியத்திற்கு அதிகமாக செலவு செய்வர். இறைவனுக்குச் செய்வதைவிட எளியவருக்குச் செய்வதை விரும்புவார்கள். தான் பட்டினி கிடந்தாலும் மற்றவர்கள் வயிறு நிறைய வேண்டுமென்று மட்டுமே நினைப்பார்கள். மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள். மனிதருள் மாணிக்கமாவார்கள். இராஜதந்திரம் அறிந்தவர்கள்.

சிக்கலான பிரச்சினைகளையும் வெகு சுலபத்தில் முடித்து விடுவார்கள். பஞ்சாயத்து செய்வதிலும் சமரசம் செய்வதிலும் படுகில்லாடிகள், போட்டியொன்று வந்து விட்டால் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.நண்பர்களிடம் விட்டுக் கொடுத்துப் பழக வேண்டும். பிடிவாத குணமுடையவர்கள். மற்றவர்களுக்குத் தொந்தரவு என்று வந்துவிட்டால் ஒருபோதும் கஷ்டப்படுத்த மாட்டார்கள. மற்றவர்களைத் தன்னுடைய காரியத்திற்கு என்று வற்புறுத்தி இழுக்க மாட்டார்கள். தாமே நேரடியாகச் செய்து நல்ல பெயரெடுப்பார்கள்.




மிக்க சாமர்த்திய சாலிகள். கவர்ச்சிக்காக மயங்குவார்கள். அழகு மிக அதிகமாக இவர்களை ஈர்க்கும் திறமையை ஆதரிப்பார்கள். போலிகளை சாடுவார்கள். அதிர்ஷ்டத்தை விரும்புவர். பிறர் சொத்தின் மீது ஆசைப்படமாட்டார்கள். இரக்க குணமிருக்கும். சாந்த சொரூபிகள். அமைதி தோய்ந்த முகத்துடனிருப்பார்கள். அனைத்தும் அறிந்தவர்கள்.

பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். பல தகுதிகள் இருக்கும். குற்றம் கண்டு பிடிப்பதிலும், குதர்க்கம் செய்து காரியம் சாதிப்பதிலும் கெட்டிக்காரர்கள். கலாரசிகர்கள். எவ்வளவு தான் பிறருக்கு உதவினாலும் சிலரையே சிறந்த நண்பர்களாக்கிக் கொள்வார்கள். நட்பு நீடிக்கும் உயிருடன் ஒன்றிக் கலந்த நட்பாகவே அமையும். இவர்கள் மற்றவர்களின் போற்றுதலையும் தூற்றலையும் ஏமாற்றம் தரும் வஞ்சனை வார்த்தைகளையும் நம்பி ஏமாறமாட்டார்கள்.

தன்னை ஏமாற்ற நினைப்பவர்களை கண்டுகொண்டு ஒதுங்கிவிடுவார்கள். நன்மை செய்யாவிட்டாலும், தீமை செய்யமாட்டார்கள். சிறு தவறுசெய்தாலும் தன்னைத் தானே வற்புறுத்தி , வேதனை கொள்வார்கள். நீதி சத்தியம் என்று மற்றவருக்காகவும் சமுதாயத்திற்காகவும் போராடும் சத்தியவான்கள். பெரிய மகான்களாகவும் தீர்க்க தரிசிகளாகவும் விஞ்ஞானிகளாகவும், பற்றற்ற மெய்ஞ்ஞானிகளாக வும் திகழ்பவர்கள். 2 ஆம் எண்காரர்கள் தனக்கு அப்பாற்பட்ட ஏதேனும் ஒரு சக்தியின் மீதோ, தெய்வ பக்தியின் மீதோ குருவின் மீதோ நம்பிக்கை வைத்து இயங்கினால் வாழ்க்கையில் பிடிப்பு உண்டாகும். கற்பனையில் உலா வரும் இவர்களிடம் சந்தேகமே தனித்தன்மையாக இருக்கும். யோசனை செய்வதில் திலகங்கள். சிறு சிறு பிரச்சினைகளைப் பெரிதாக்கி பெருமூச்சு விடுவார்கள். இயல்பான கரியங்களைச் செய்யக்கூட பெற்றவரோ அல்லது மற்றவரோ பிடிவாதமாகச் சொல்லி சொல்லித்தான் செய்வார்கள். துக்கம் கலையாத முகத்துடன் எப்போதும் ஒருவித ஏக்கத்துடன் காணப்படுவார்கள்.

(தொடரும்....)

# ராஜபக்ஷாக்களை பிரிக்க முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்களான சமல் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரை பிரிக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பிரதான பத்திரிகைகள் இரண்டின் ஆசிரியர்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ராஜபக்ஷ சகோதரர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த நான்கு பேருடனும் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டுள்ள குறித்த இரண்டு பத்திரிகை ஆசிரியர்களும், ஒருவர் கூறாத விடயத்தை ஒருவர் கூறியதாக பல முறை இவர்களிடம் கூறி, பிரச்சினை ஏற்படுத்த முயற்சித்துள்ளதாக சாட்சியுடன் தெரிய வந்துள்ளது.

அத்துடன் தங்கள் பத்திரிகை சட்டத்தை மீறி ராஜபக்ஷ சகோதரர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனையடுத்து ராஜபக்ஷ சகோதரர்களினால் திட்டமிட்டு குறித்த இரண்டு ஆசிரியர்களுக்கு போலி தகவல்களை மாத்திரம் கூறி அவர்களை ஏமாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

# அரச சொத்துக்களை சீனாவுக்கு விற்பனை செய்த கூட்டு எதிரணியினருக்கு சில தினங்களில் தண்டனை

## ஐ.தே.க. எம்.பி. காவிந்த கணிப்பு

(கொழும்பு)

அரச சொத்துகளை, சீன வியாபாரிகளுக்கு விற்பனை செய்தமையால் சிக்கித் தவிக்கும் ஒன்றிணைந்த எதிரணியினருக்கு, அந்தக் குற்றங்களுக்காக, இன்னும் சில தினங்களில் தண்டனை கிடைக்கவுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடந்த நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், குறித்த தண்டனைகளுக்குப் பயந்தே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அப்போதைய சலூன்களின் கதவுகள், மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகவும் தலைகளை மாற்றிவிட்டு, தலைமைத்துவத்தைக் கைப்பறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

அதற்காக, அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 பேர் கொண்ட அணியினரையும் இணைத்துக் கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டிய காவிந்த எம்.பி, ஒன்றிணைந்த எதிரணியினருக்கு, இந்த நாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவைப்பாடு இல்லையென்றும் தெரிவித்தார். (இ-7)



*யாழ். மருதங்கேணி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவினரால் நேற்று வெள்ளிக்கிழமை மருதங்கேணி சமுர்த்தி வங்கியில் இருந்து மருதங்கேணி சந்தி வரையில் புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி இடம் பெற்றது. இதில் மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், சமுர்த்தி முகாமையாளர் சி.விக்னேஸ்வரன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-தும்பளை செய்தியாளர்)*



# பூநகரிப் பிரதேச சபை மீன் கேள்வி அறிவித்தல்-2018

மேற்படி பூநகரி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச்சந்தை, மாட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக்கடை, கருவாட்டுக்கடை ஆகியவற்றுக்கான கேள்விகள் கீழ்க்காணப்படும் நிபந்தனைகளுக்குஅமைவாக 17.07.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- கேள்விப்படிவம் விநியோகித்தல் - 02.07.2018 தொடக்கம் 13.07.2018 வரை
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 02.07.2018 தொடக்கம் 16.07.2018 வரை
- கேள்விப் படிவம் திறத்தல் - 17.07.2018 மதியம் 12 மணி

மீன் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | கடை விபரம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக்கக்கூடிய கேள்விக்கட்டணம் | ஏற்றுக்கொள்ளப் படும் ஆகக் குறைந்ததொகை |
|---|---|---|---|---|
| 01 | முட்கொம்பன் பொதுச்சந்தை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 02 | பள்ளிக்குடாபொதுச்சந்தை | 500.00 | 5000.00 | 20000.00 |
| 03 | ஜெயபுரம் பொதுச்சந்தை | 500.00 | 5000.00 | 15000.00 |
| 04 | கிராஞ்சிபொதுச்சந்தை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 05 | நாச்சிக்குடாகடற்கரைபொதுச்சந்தை | 500.00 | 3000.00 | 15000.00 |
| 06 | வாடியடிமாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 8000.00 | 40000.00 |
| 07 | ஜெயபுரம் மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 8000.00 | 25000.00 |
| 08 | நாச்சிக்குடாமாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10500.00 | 400000.00 |
| 09 | பள்ளிக்குடாகோழி இறைச்சிக்கடை | 1000.00 | 3000.00 | 15000.00 |
| 10 | ஜெயபுரம் கோழி இறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 11 | கிராஞ்சிகோழி இறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 5000.00 |
| 12 | வலைப்பாடுகோழி இறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 13 | வாடியடிஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1000.00 | 5000.00 |
| 14 | பள்ளிக்குடாஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1000.00 | 5000.00 |
| 15 | கிராஞ்சிஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1000.00 | 5000.00 |
| 16 | ஜெயபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1000.00 | 5000.00 |
| 17 | நாச்சிக்குடாஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1000.00 | 5000.00 |
| 18 | வாடியடிகருவாட்டுக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 19 | பள்ளிக்குடாகருவாட்டுக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 20 | கிராஞ்சிகருவாட்டுக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 21 | ஜெயபுரம் கருவாட்டுக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |
| 22 | நாச்சிக்குடாகருவாட்டுக்கடை | 500.00 | 3000.00 | 10000.00 |

மேலதிகவிபரங்களை பூநகரி பிரதேசசபையின் உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச சபை,
வாடியடி,
பூநகரி.

அ. ஐயம்பிள்ளை.
தவிசாளர்,
பிரதேச சபை, பூநகரி.

(C-3068)


# பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரி பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பு



(கொழும்பு)

பாகிஸ்தானின் கூட்டு பாதுகாப்பு நிறைவேற்றுக்குழுவினர் பிரதானி ஜெனரல் சுபைர் மஹ்மூத் ஹயாத் பாதுகாப்பு செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கபில வைத்தியரத்னவை சந்தித்தார்.

இந்த சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி ஆகியோருக்கிடையில் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இந்நிகழ்வை நினைவு கூரும் வகையில் இருவருக்குமிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-7)

# இளைஞர் தினத்தை முன்னிட்டு E-LIBRARY திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இளைஞர் தினத்தை முன்னிட்டு உடுவில் ஐயனார் இளைஞர் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட உள்ள E.LIBRARY திறப்பு விழா நாளை முதலாம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

ஐயனார் இளைஞர்கழக தலைவர் எல்.கார்த்திக் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தே.இ.சே. மன்றம் உதவி இயக்குநர் ஐ.தவேந்திரன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சொ.சபேசன், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் பா.சுரேஸ்குமார், சுன்னாகம் நகர் மத்தி கிராம உத்தியோகத்தர் ஈ.எயூயின் மைனட், உடுவில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் சி.அனுசன், உடுவில் பிரதேச இளைஞர்கழக சம்மேளனம் தலைவர் இ.கீர்த்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

# ‘பிரதமரைத் தோற்கடிக்க ஜனாதிபதி உதவி கோரினார்’

## மகிந்த வெளிப்படுத்தல்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னைத் தொடர்பு கொண்டு, குறித்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உதவி கோரினாரென்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதற்கு தான் ஒப்புகொண்ட போதும், தீர்மானத்துக்கான வாக்களிப்பு நடைபெறுவதற்கான செயற்பாடுகளுக்கு நடுவிலேயே, ஜனாதிபதி அதைக் கைவிட்டு விட்டார் என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ள செவ்வியிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், இலங்கை மீதான இந்தியாவின் அரசியல் தலையீடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்துக் கருத்து தெரிவித்த அவரிடம், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்கு என்னவென்பது தொடர்பாக வினவிய போது, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தற்போதுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, என்ன செய்யப் போகின்றார் என்பது தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும் ஏனெனில், அவருடன் தற்போது தொடர்பில் இல்லை என்றும் கூறிய மகிந்த ராஜபக்ஷ, எனினும், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது மாத்திரம், அவர் தன்னிடம் உதவி கோரியிருந்தார் என்றும் கூறினார்.

பிரதமருக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, அது தொடர்பான தீர்மானம், ஜனாதிபதி கையிலேயே தங்கியுள்ளது என்று, தான் அப்போதே கூறியதாகவும் ஆனால், அண்மையில் இதுபற்றி கருத்து தெரிவித்திருந்த ஜனாதிபதி, தன்னால் அவ்வாறு நடந்து கொள்ள முடியாது என்றும் ஏனெனில், தனக்கு மேல் சிலர் உள்ளமை தொடர்பில் குறிப்பிட்டிருந்தார் என்றும் சுட்டிக்காட்டிய மகிந்த ராஜபக்ஷ, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு மேல், யார் அப்படி தீர்மானம் எடுக்கக்கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்பது பற்றி, தன்னால் உணர்ந்து கொள்ள முடியாமல் உள்ளதென்றும் கூறினார்.

இது தொடர்பில், பல ஊடகங்களில், பலதரப்பட்ட கருத்துகளும் விமர்சனங்களும் வெளியிடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், வேட்பாளராக யாரை நிறுத்த வேண்டுமென்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் மாத்திரமே தீர்மானம் எடுக்க முடியும் என்று ஒன்றிணைந்த எதிரணியின் அனைத்து எம்.பிக்களும் கூறி வருகின்றமை குறித்தான நிலைப்பாடு குறித்து அவரிடம் வினவியபோது, தனியாக இருந்து, எந்தவொரு தீர்மானத்தையும் தன்னால் எடுக்க முடியாது என்றும் நாட்டின் பலபாகங்களுக்கும் விஜயம் செய்த போது, பொதுமக்களின் பல்வேறான கருத்துகள் கிடைத்தன என்றும் கூறினார்.

அத்துடன், ஏனைய தலைவர்களை விட, இந்த நாட்டை அதிகளவு சுற்றிவந்த தான், பொதுமக்களின் கருத்துகளையே முடிவாக எடுத்துக் கொள்வதாகவும் கூறினார். அத்தோடு, ஒன்றிணைந்த எதிரணியும் இது தொடர்பில் கருத்தளிக்க உள்ளதாகவும், சரியான நேரம் வரும் போது அனைவரும்கூடி வேட்பாளர் யார் என்பது தொடர்பாகத் தீர்மானிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே அடுத்த வேட்பாளராக இருப்பாரென்று, பலரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றமை பற்றி வினவிய போது, ஜனாதிபதி வேட்பாளருக்குப் பொருத்தமானவராக அவர் இருப்பார் என்றே அனைவரும் கூறுகின்றனரே தவிர, அவரைத் தெரிவு செய்துவிட்டோம் என்று யாரும் கூறவில்லை என்றும், அத்தோடு, வேறு சில கோணங்களிலும் இது பற்றிப் பேசப்படுகின்றது என்றும் கூறினார்.

“கடந்த தேர்தலில், நீங்கள் தோல்வியைத் தழுவியமைக்கு, நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களின் முக்கிய பங்களிப்பே காரணம் என்று கூறப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில், சிறுபான்மையினரின் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் குறித்து தங்களுடைய கருத்து யாது?” என்று அவரிடம் வினவப்பட்ட போது, அதற்குப் பதிலளித்த அவர், “அனைத்துச் சமூகங்களிலிருந்தும் வாக்குகளைப் பெற்றுக்கொள்வது முக்கியமானதென்றும் சிறுபான்மைச் சமூகம், ஒரு கட்சிக்கு மாத்திரம் தான் வாக்களிக்க வேண்டுமென்றும் தீர்மானம் எடுத்தால், அது தாக்கத்தை ஏற்படுத்துமென்றும் குறிப்பிட்ட மகிந்த, ஆனால், அதுவே தேர்தலின் இறுதி முடிவில் ஒரு காரணியாக அமையாதென்றும் ஆனால், ஜனாதிபதியாக ஒருவர் வரவேண்டும் என்றால், அனைத்து சமூகத்தினரும் வாக்குகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானதென்றும் வலியுறுத்தினார்.

“கடந்த முறை, எங்களுக்கு எதிராக, போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. உண்மையில், எங்களுடன் இருந்தவர்களாலேயே, அவை முன்னெடுக்கப்பட்டிருந்தன. எங்களைக் காட்டிக்கொடுத்து விட்டு, அவர்கள் கைவிட்டார்கள். ஆனால், தற்போது, சிறுபான்மைச் சமூகத்தினர், அதை உணர்வதற்கு ஆரம்பித்துள்ளனர்.

எம்முடைய அரசாங்கம் உதவி செய்ததைப்போன்று, எந்தவொரு அரசாங்கமும் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு உதவவில்லை. முஸ்லிம் சமூகத்தினர், தத்தமது கிராமங்களில் சந்தோஷமாக இருக்கின்றனரென்றால், அதற்கு, எங்களுடைய அரசாங்கமே காரணம்.

“யுத்தத்தைத் தோற்கடித்து, வடக்கிலும் கிழக்கிலும் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தோம். நாம், கிண்ணியா போன்ற பகுதிகளில், மக்களை மீள்குடியமர்த்தினோம். அவர்களது பகுதிகளில், எந்தவொரு அபிவிருத்தியும் இல்லாமல் இருப்பதையடுத்தே, அவர்கள் அதை தற்போது புரிந்துகொண்டுள்ளார்கள்” என்று அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில், இந்தியாவால் தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென்றும் அரசியலில், இந்திய அரசாங்கத்தால் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார். ஆனால், இலங்கையின் உள்ளக அரசியலில், இந்தியாவின் தலையீடு இருக்காதென்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தொடர்பான செயற்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த அவர், யுத்த வீரர்களுக்கு தீங்கு ஏற்படுத்த முடியாதென்றும் வன்முறையால், முழு நாடும் துன்புறுத்தப்பட்ட போது ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி நாம் கலந்துரையாடுவோம் என்றும் மக்களுக்கு எதிரான கொலை மற்றும் சித்திரவதைக்கு எதிராகக் குரல் எழுப்புவோம் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் பற்றிக் கருத்து தெரிவித்த அவர், தற்போதுள்ள அரசமைப்பில் துண்டு துண்டான மாற்றங்களைக் கொண்டுவருவதில் எந்தவொரு பயனும் இல்லையென்றும் நாடாளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியை நீக்குவது பற்றி, அதில், எந்தவொரு நிபந்தனையும் விதிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வீட்டைத் திருத்திக் கொடுக்க ரங்கேயின் மகனுக்கு உத்தரவு

(கொழும்பு)

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி வீடொன்றை சேதப்படுத்தியமை தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டாரவின் வழக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சேதமாகியுள்ள வீட்டை பூரணமாக திருத்தி கொடுக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று சிலாபம் மாவட்ட நீதிபதி மஞ்சு ரத்நாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டார, சேதமடைந்த வீட்டை முழுமையாக திருத்திக் கொடுக்கவில்லை என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், வீட்டுக்கு ஏற்பட்டிருந்த சேதத்தை திருத்தல், யசோத பண்டார பிணையில் விடுவிப்பதற்கான நிபந்தனைகளில் ஒன்று என குறிப்பிடப்படுகின்றது.

எனினும், நிர்மாண பொருட்கள் கொண்டுவரப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பாதிப்புக்குள்ளானவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

எனவே வழக்கை அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளதுடன், அதற்கு முன்னர் சேதமாகியுள்ள வீட்டை பூரணமாக திருத்திக் கொடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஒரு இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கவே "Enterprise SriLanka"

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

‘Enterprise Sri Lanka’ திட்டத்தின் ஊடாக ஒரு இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்த கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த திட்டம் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருமலையில் காணாமல்போன குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(திருமலை)

திருகோணமலை - இலுப்பைக்குளம் கிராம உத்தியோகத்தர் பகுதிக்கு உட்பட்ட சிறுப்பிட்டி கிராமத்தில் காணாமல்போன குடும்பஸ்தரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுப்பிட்டி கிராமத்தை சேர்ந்த இராசரட்ணம் பிரபு எனும் 33 வயதுடைய குடும்பஸ்தர் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் வேலைக்கு சென்றுள்ளார்.

எனினும் அவர் முற்பகல் 10 மணி வரையில் வீடு திரும்பாமையினால் உறவினர்கள் தேட ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் இலுப்பைக்குளம், கன்னியா வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்த உறவினர்கள் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்ட போது, ஆடுமேய்க்க சென்ற ஒருவரின் தகவலின் அடிப்படையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த சடலம் இராசரட்ணம் பிரபுவினுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# "வெற்றிலை கொடுத்து வரவேற்கவில்லை"

## அதிபரை அச்சுறுத்தி முறையற்ற இடமாற்றம் வழங்கிய முன்னாள் முதலமைச்சருக்கு இரண்டரை இலட்சம் அபராதம்

(கொழும்பு)

முறையற்ற இடமாற்றத்தை வழங்கி, பாடசாலை அதிபரொருவரான கருணாரத்ன பண்டார என்பவரின் அடிப்படை உரிமையைப் பறித்தாரென்ற குற்றத்துக்காக, பாதிக்கப்பட்ட அதிபருக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் அபராதத்தைச் செலுத்துமாறு, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேஷல ஜெயரத்னவுக்கு, உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இந்த அபராதத்தொகையை, தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்த வேண்டுமென்றும் பணித்த நீதிமன்றம், அதற்கு மேலதிகமாக, அரச தரப்பிலிருந்தும் குறித்த அதிபருக்கு, 50 ஆயிரம் ரூப்பாய் அபராதம் செலுத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டது.

அத்துடன், குறித்த அதிபர், இடமாற்றத்துக்கு முன்னர் பணியாற்றிய பாடசாலைக்கே மீண்டும் பணியில் அமர்த்தப்பட வேண்டுமென்றும் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது. அநுராதபுரம் - நிவன்தகச்சேதிய மகா வித்தியாலய அதிபரான கருணாரட்ன பண்டாரவின் அழைப்பின் பேரில், குறித்த பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்காகச் சென்றிருந்த முன்னாள் முதலமைச்சரை, வெற்றிலை கொடுத்து வரவேற்கவில்லையெனத் தெரிவித்து, மேற்படி அதிபரைத் தகாத வார்த்தைகளால் பேசியுள்ள பேஷல ஜெயரத்ன, அவ்வதிபருக்கு அச்சுறுத்தல் விடுத்ததோடு, முறையற்ற இடமாற்றத்தையும்வழங்கியிருந்தார்.



இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஈவா வனசுந்தர, சிசிர டீ அப்ரூ மற்றும் நலின் பெரேரா என்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, முன்னாள் முதலமைச்சரின் செயற்பாடுகளுக்குக் கடும் கண்டனம் தெரிவித்த நீதியரசர் குழாம், மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்ததோடு, இந்த வழக்கை முடிவுறுத்தியது. (இ-7)

# தொழில் வாய்ப்புக்கள் தேங்கி நிற்கும் நிலை

## தொண்டமான் சுட்டிக்காட்டு

(ஹற்றன்)

பெருந்தோட்டத் துறையில் அதிகளவான தொழில் வாய்ப்புக்கள் தேங்கியுள்ளன. ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்துவிட்டு இன்னொரு தொழிலை நாடுவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளார்.



மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், நுவரெலியா, வலப்பனை, ஹங்குரங்கெத்த ஆகிய கல்வி வலயப் பாடசாலைகளுக்கு, கற்றல் உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொட்டகலையில் இடம்பெற்றது.

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் எம்.ரமேஸ்வரன் தலைமையில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான ஏ.பி.சக்திவேல், ஏ.பிலிப்குமார், கொட்டகலை மற்றும் அக்கரப்பத்தனை பிரதேச சபைகளின் தலைவர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர், "எம்மைப் பொறுத்தவரையில் அரசாங்கம் எமக்காக 3000 தொடக்கம் 5000 வரையிலான தொழில் வாய்ப்புகளை வழங்குகின்றது.

ஆனால், இந்தத் தொழில் வாய்ப்புகளை முழுமையாக அனுபவிக்கக்கூடிய வகையில் படித்துவிட்டு தகுதியானவர்களை நியமிக்க வேண்டும். வெறுமனே தகுதியானவர்கள் இல்லாத பட்சத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற தொழில் வாய்ப்புகள் எமது சமூகத்தில் தேங்கி நிற்கும் நிலையுள்ளது. எதிர்வரும் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது.

உதாரணமாக 500 பேருக்கு தொழிலை கொடுத்து, பின் 3000 பேருக்கு வேறு ஒரு தொழிலை கொடுக்க அரசாங்கம் முன்வரும் பொழுது 500 பேருக்கு வழங்கிய தொழிலிலிருந்து 3000 பேருக்கு வழங்கப்படும் தொழில் மீது ஆசைப்பட்டு சுமார் 250 பேர் முன்னர் வழங்கிய தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர்.

அப்போது 500 பேருக்கு வழங்கப்பட்ட இந்த தொழிலுக்கு 200 பேர் மாத்திரமே இருப்பார்கள். மிகுதி 300 பேருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு எமக்குக் கிடைப்பதில்லை. ஆகையால் 300 பேருக்கான தொழிலில் தேக்க நிலை எற்படுகின்றது.

எனவே, எதிர்காலத்தில் இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு நமது பிள்ளைகள் எந்தத் தொழிலுக்கு ஆசைப்படுகின்றார்களோ அந்தத் தொழிலுக்கு அவர்களைப் பயிற்றுவித்து தயார்படுத்திக்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார். (இ-7)

# நாடுகடத்தப்படுவதை தடுக்கக்கோரி

## இலங்கை அகதிகள் குடும்பத்திற்காக ஆஸியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கை அகதிகள் குடும்பம் ஒன்றை நாடு கடத்தும் செயற்பாட்டை முறியடிக்கும் நோக்கில் குயின்ஸ்லாந்தின் பிலோயிலா நகர மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில், அவர்களுக்கு ஆதரவாக இணையம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கையெழுத்து திரட்டும் போராட்டத்தில் இது வரையில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஆனால் இந்த மனுவிற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் இன்னும் பதிலளிக்கவில்லை என அந்த நாட்டின் ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், அவர்களை நாடுகடத்த வேண்டாம்என்று தொடர்ந்தும் முயற்சிகள் முன்னெடுத்துள்ளனர்.

நடேஸ் மற்றும் பிரியா ஆகியோரும் அவரது இரண்டு பிள்ளைகளும் நாடு கடத்தல் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள போதும், பிரியாவும் அவரது 3வயது மகளும் செய்துள்ள மேன்முறையீட்டின்படி அவர்கள் தற்காலிகமாக நாடுகடத்தலில் இருந்து பாதுகாப்பை பெற்றுள்ளனர்.

எனினும் நடேஸ் மற்றும் அவரது ஒரு வயது மகள் ஆகியோர் எந்நேரமும் நாடு கடத்தப்படலாம் என்ற நிலைமை இருப்பதாக தெரிய வந்துள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## அபிவிருத்திக் குழுக்களின் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வட்டார ஒருங்கிணைப்பு குழுக்கூட்டமும் அபிவிருத்திக் குழுக்களின் அங்குரார்ப்பணமும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் தலைமையில் நடைபெறும். (இ)

## 7 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

(கொழும்பு)

7 வயது சிறுமி ஒருவரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தில் 48 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம் கொட்டுகச்சிய, தங்கஹூவல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து சிறுமி பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## விபத்தில் கணவன் உயிரிழப்பு மனைவியும் இரு பிள்ளைகளும் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

கொக்கரெல்ல பகுதியில் பேருந்து ஒன்று ஆட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் இரண்டு குழந்தைகள் உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த ஆட்டோ சாரதி கொக்கரெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கலேவெல, புவக்பிட்டிய பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் மனைவியும் இரு பிள்ளைகளும் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நகுலன் சஞ்சிகை வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.தயானந்தன் தலைமையில் இடம் பெறும். (இ-7)

## மோ.சைக்கிளை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பருத்தித்துறை பொலிஸாரினால் மோட்டார் சைக்கிள் ஒன்று (NP NZ 1305) மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறும் தவறின் 2 மாதங்களுக்குப் பின் அரசுடைமை ஆக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## இலங்கை வழங்கும் உதவிக்கு உகண்டா ஜனாதிபதி நன்றி



ஆபிரிக்காவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உகண்டாவின் ஜனாதிபதி ஜொவேரி முசவெரியை சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. தமது நாட்டின் தொழில்நுட்ப பயிற்சி நிலையமொன்றை தரமுயர்த்துவதில் இலங்கை வழங்கிய உதவிகளுக்கு உகண்டா ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்தார்.

மேலும், தமது நாட்டின் பொருளாதாரத்தில் இலங்கை முதலீட்டாளர் வகிக்கும் பங்குபற்றியும் அவர் மேலும் குறிப்பிட்டார். சர்வதேச அரங்கில் இலங்கைக்கு உகண்டா வழங்கும் உதவிகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்தார். (இ-7)




# கன்றுக் குட்டி

பாபு அவன் தங்கை நீலா இருவருக்கும் பசு மாடு, நாய், பூனை மற்றும் பறவைகளை வளர்ப்பது என்றால் மிகவும் விருப்பம். இதுதான் இவர்களின் பொழுது போக்கு. இருப்பினும் படிப்பிலும் சூரப்புலிகள். தாங்கள் சாப்பிடும் போது தங்கள் செல்லப் பிராணிகளுக்கும் வேண்டிய உணவு, தின்பண்டங்கள் எடுத்துக் கொண்டு தோட்டத்தில் அவைகளுக்கு அளித்து விட்டு தான் சாப்பிடுவர்.

அவர்கள் அப்பா கண்ணன் ஒரு அழகான சிவப்பு நிறமுள்ள பசுவை அதன் கன்றோடு வாங்கி வந்தார். அவைகளைக் கண்டதும் குழந்தைகள் ஓடி வந்து அப்பாவைக் கட்டிக் கொண்டு பசுவை தொடலாமா என்று கேட்டனர். அது உங்கள் செல்லப் பசு. கிட்டப் போய் தடவிக் கொடுங்கள் ஒன்றும் செய்யாது! என்றார்.

பாபுவும் நீலாவும் தங்கள் செல்லப் பிராணியிடம் சென்று பசுவையும் கன்றுக் குட்டியையும் தழுவித் தடவிக் கொடுத்தனர். அதுவும் குழந்தைகளை தன் நாக்கினால் நக்கி தன் அன்பைக் காட்டியது. மிகவும் மகிழ்ந்த குழந்தைகள் பசுவிற்கு லஷ்மி என்றும் அதன் கன்றுக் குட்டிக்கு நந்தினி என்றும் பெயரிட்டனர். பள்ளியிலிருந்து வந்ததும் அவர்களின் இருப்பிடம் மாட்டுக் கொட்டகைதான்.

ஒரு வருடம் ஓடியது. கன்றுக் குட்டி நந்தினியும் தன்னிஷ்டப்படி வீதி பூராவும் ஓடி விளையாடுவது எல்லாருக்கும் பார்க்க நல்ல வேடிக்கையாக இருந்தது.

ஒரு நாள்,

நந்தினி வீதி கடைசி வரை ஓடிவிட்டது. அந்த சமயம் அவ்வழியே வந்து கொண்டிருந்த லொறி அதன் பின்பக்கம் பூராவும் மாடுகளை ஏற்றி வந்தது. அதில் வந்த வியாபாரி லொறியை நிறுத்தி அங்கு ஓடி வந்த நந்தினியைப் பிடித்து லொறியில் ஏற்றிக் கொண்டு பறந்துவிட்டான். இதை யாரும் கவனிக்கவில்லை. வெகு நேரமாகியும் நந்தினி வீடு திரும்பாததால் பாபுவும் நீலாவும், "அப்பா! நம் நந்தினியைக் காணவில்லை. எங்கே சென்றது என்றும் தெரியவில்லை. லஷ்மியும் அம்மா என்று கதறுகிறது" என்று கூறி ஓவென்று அழுதனர். கண்ணன் அவர்களை சமாதானப்படுத்தி, "நந்தினி எங்கும் சென்றிருக்காது வருந்தாதீர்கள் கண்டுபிடித்து வருகிறேன்!" என்று சொல்லி பொலிஸ்ஸ்டேஷன் சென்று புகார் கொடுத்தார். ஒன்றும் பயனில்லை. பாபுவும் நீலாவும் பள்ளி சென்று மாலை திரும்பும் போது கடைத்தெருவில் ஒரு லொறியை சுற்றி கூட்டமும் கூச்சலுமாகவும் இருந்தது. மாடுகளோடு உள்ள லொறியைக் கண்டதும் பாபுவும் நீலாவும் தங்கள் நந்தினி இந்த லொறியில் இருக்கக்கூடாதா என்று கடவுளை வேண்டினர். லொறியை வளைத்துப் பிடித்து போனில் இன்ஸ்பெக்டர் சட்டப்படி அனுமதி பெறாமல் மாடுகளை மாட்டு இறைச்சிக்காக அண்டை மாநிலத்துக்கு விற்பதற்காக ஏற்றிச் சென்றது தெரிய வந்தது. ஆகவே, வியாபாரியை கைது செய்து மாடுகளை விடுவித்து, "பிராணிகள்" வளர்க்கும் நல சங்கத்திற்கு கொண்டு செல்ல உத்தரவிட்டார். லொறியிலிருந்து ஒவ்வொரு மாடாக இறங்கி வரும் போது ஒரு கன்றுக் குட்டியும் குதிப்பதைக் கண்டதும் பாபுவும் நீலாவும் "நந்தினி நந்தினி" என்று கூவினர். என்ன ஆச்சரியம்! இவர்கள் குரலைக் கேட்டதும் நந்தினி துள்ளிக் குதித்து இவர்களிடம் ஓடி வந்தது.



அதைக் கண்ட இன்ஸ்பெக்டர், "இதுதான் உங்கள் கன்றுக் குட்டியா? உங்கள் தந்தை பொலிஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்துள்ளார். நல்லவேளை நாங்களும் லொறியைப் பிடித்துச் சோதனை செய்தோம். நீங்களும் உங்கள் செல்லப் பிராணியைக் கண்டு பிடித்து விட்டீர்கள். இல்லாவிட்டால் இதையும் இறைச்சிக் கூடத்திற்கு கடத்தியிருப்பார்கள். நீங்கள் வாயில்லாப் பிராணிகளிடம் கொண்டுள்ள அன்பைப் பாராட்டுகிறேன். உங்களுக்கு நல்ல பரிசு அளிக்குமாறு மேலதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப் போகிறேன். உங்கள் கன்றுக் குட்டியை எங்கள் காவலரோடு அனுப்புகிறேன். குஷியாக வீட்டிற்கு செல்லுங்கள்!" என்று அவர்கள் முதுகில் தட்டிக் கொடுத்தார். நந்தினியோடு வரும் குழந்தைகளைக் கண்டதும் கண்ணன் வியப்படைந்தான். பொலிஸ் காவலர் நடந்த நிகழ்ச்சியை விபரமாகக் கூறினார். கண்ணன் தன் குழந்தைகளைப் பாராட்டி மகிழ்ந்தார்.




❖1737-ரஷ்யாவின் படைகள் மார்ஷல் மியூனிச் தலைமையில் துருக்கியப் படைகளைத் தாக்கி 4,000 துருக்கியர்களைச் சிறைப் பிடித்தனர்.

❖1882-அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட்டை சுட்டுக் கொன்ற "சார்ல்ஸ் கைட்டோ" தூக்கிலிடப்பட்டான்.

❖1905-சிறப்புச் சார்புக் கோட்பாட்டை அறிமுகப் படுத்தும் ஐன்ஸ்டீனின் இயங்கும் பொருட்களின் மின்னியக்கவியல் ஆய்வுக் கட்டுரை வெளிவந்தது.

❖1910- இலங்கையில் ஐந்து சத செப்பு நாணயம் பாவனையில் இருந்து விலக்கப்பட்டது.

❖1912- கனடாவில் ரெஜினா என்ற இடத்தில் சூறாவளி தாக்கியதில் 28 பேர் கொல்லப்பட்டனர்.

❖1917- முதலாம் உலகப் போர்: கிரேக்கம் மைய சக்திகள் உடன் போரை அறிவித்தது.

❖1934-கிட்லரின் அரசியல் எதிரிகளுக்கு எதிரான வன்முறை நீள் கத்திகளுடைய இரவு செருமனியில் நிகழ்ந்தது.

❖1937- உலகின் முதலாவது அவசரத் தொலைபேசி எண் (999) லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖1941-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியினர் உக்ரைனின் லுவோவ் நகரைக் கைப்பற்றினர்.

❖1944-இரண்டாம் உலகப் போர்: செர்போர்க் சண்டை முக்கிய துறைமுகம் அமெரிக்கப் படைகளிடம் வீழ்ந்ததை அடுத்து முடிவடைந்தது.

❖1956-அமெரிக்காவின் இரண்டு விமானங்கள் அரிசோனாவில் மோதிக் கொண்டதில் 128 பேர் கொல்லப்பட்டனர்.

❖1960-கொங்கோ பெல்ஜியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

❖1971- சோவியத்தின் சோயுஸ் 11 விண்கலத்தில் ஏற்பட்ட காற்றுக் கசிவினால் விண்வெளி வீரர்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

❖1972- ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரத்தில் ஒரு லீப் வினாடி அதிகரிக்கப்பட்டது.

❖2002-பிரேசில் தனது ஐந்தாவது உதைபந்தாட்ட உலகக்கிண்ணத்தை வென்றது.

**பிறப்புகள்**

❖1912-மாதவையா கிருட்டிணன், தமிழக வனவுயிரிப் புகைப்படக்கலைஞர், இயற்கையார்வலர் (இ. 1996)

❖1919-நாவற்குழியூர் நடராசன், இலங்கைத் தமிழறிஞர், கவிஞர், வானொலி ஒலிபரப்பாளர் (இ. 1994)

❖1921-கோ. விவேகானந்தன், தமிழக எழுத்தாளர்

❖1934-சிந்தாமணி நாகேச இராமச்சந்திர ராவ், இந்திய வேதியியலாளர்

❖1948-ராஜ ஸ்ரீகாந்தன், ஈழத்து எழுத்தாளர் (இ. 2004)

❖1964-மார்க் வாட்டர்ஸ், அமெரிக்க இயக்குநர்

❖1966-மைக் டைசன், அமெரிக்க குத்துச்சண்டை வீரர்

❖1967-அரவிந்த்சாமி, தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖1969-சனத் ஜயசூரிய, இலங்கைத் துடுப்பாளர்

**இறப்புகள்**

❖1945-அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், தென்னிந்தியக் கருநாடக இசைக் கலைஞர் (பி. 1877)

**சிறப்பு நாள்**

❖சிறுகோள் நாள்

❖விடுதலை நாள் (காங்கோ மக்களாட்சிக் குடியரசு, 1960)

❖புரட்சி நாள் (சூடான்)

❖கடற்படை தினம் (இசுரேல்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 130 | 130 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 320 | 350 | 400 | 250 |
| தக்காளி | 300 | 350 | 380 | 250 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 | 30 | 40 | 50 |
| கோவா | 180 | 250 | 90 | 200 | 200 | 180 |
| கரட் | 220 | 450 | 230 | 250 | 400 | 300 |
| பூசணி | 50 | 40 | 260 | 40 | 40 | 30 |
| புபோல் | 120 | 120 | 120 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 35 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 110 | 140 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 300 | 320 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 110 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | 120 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 160 | 160 | 200 |
| லீக்ஸ் | 300 | 400 | 250 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 180 | 150 | 110 | 180 | 200 | 120 |
| கறிமிளகாய் | 200 | 400 | 120 | 200 | 400 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 480 | 600 | 600 | 800 |
| போஞ்சி | 320 | 400 | 200 | 320 | 320 | 260 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 50 | 70 | 80 | 80 |
| கீரை-1பிடி | 40 | 20 | 35 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 50 | 70 | 80 | 80 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 25-50 | 70 | 70 | 70 |
| இராசவள்ளி | 180 | 200 | 140 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | 280 | 280 | 240 |
| முள்ளங்கி | 100 | 120 | 40 | 120 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 10 | 50 | 40 | 35 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 50 | 200 | 60 | 80 | 80 |

கர்வம் பிடித்த புத்திசாலியைவிட,
அன்பான முட்டாளே மேல்.
~ பாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அவர்கள் அப்படிக் கொல்கிறார்கள்; இவர்கள் இப்படிக் கொல்கிறார்கள்

ஒவ்வொரு நாளும் ஏதோவொரு அவலத்தை கேட்பதுதான் எங்களின் வாழ்வு என்பதாக நிலைமை மாறிவிட்டது.

கொலை, கொள்ளை, வாள்வெட்டு, விபத்து, தற்கொலை என்பவற்றுக்கு குறைவில்லை எனும் அளவில் நிலைமை படுமோசமாக மாறி வருகிறது.

தவிர, போதைவஸ்து பாவனை, மது பாவனை என்பன தாராளமாகியபோது மேற்கூறிய சம்பவங்களுக்கும் பஞ்சமில்லை என்பதே முடிவு.

இவை ஒருபுறம் இருக்க வேலைவாய்ப்பு, தொழில்நட்டம், பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால் சாமானிய மக்கள் திண்டாடுகின்றனர்.

இதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள கடன் வழங்கும் நிறுவனங்களும் நகை அடகு பிடிக்கும் அமைப்புக்களும் வடபுலம் முழுவதிலும் விளம்பரப் பிரசுரங்களைக் காட்சிப்படுத்தி சாமானிய மக்களை கடனாளிகளாக்குகின்றன.

இவைதான் என்றால், இவற்றைக் கடந்து வடபுலத்தில் உள்ள அரச கூட்டுஸ்தாபன அமைப்புக்களில் பணிகள் சரியாக இடம்பெறவில்லை.

இந்த அமைப்புக்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் அலைகின்றனர் என்பது மிகப்பெரும் குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுகிறது.

அரச திணைக்களங்கள், கூட்டுஸ்தாபன அமைப்புக்களின் பணிகளைப் பொதுமக்கள் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கு சமாந்திரமாக – அரச உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு, சம்பள நிலுவை உள்ளிட்ட இதர விடயங்களும் கவனிக்கப்படாமல் அலட்சியம் செய்யப்படுவதான குற்றச்சாட்டுக்களும் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக ஆசிரியர்களின் சம்பள நிலுவை, பதவி உயர்வு, ஓய்வூதியம் போன்ற விடயங்களில் முகாமைத்துவ பணிகளில் ஈடுபடுபவர்கள் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர்.

இதனால் தமக்குக் கிடைக்க வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிரியர்கள் அலைந்து திரிந்து மனம் நொந்து போகின்றனர்.

ஒரு காலத்தில் நிர்வாகத்திறன் மிக்க பணியாளர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து தமது பணியைப் பங்கமின்றி; பழியின்றி ஆற்றினர்.

ஆனால் இன்று இப்படிச் செய்பவர்கள் எப்படி அழுந்துவரோ என்று மற்றவர்கள் திட்டித் தீர்க்கும் அளவில் அரச பணியாளர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஒட்டுமொத்தத்தில் தெருவில் திரிகின்றவர்கள் வாள்வெட்டுக் கலாசாரத்துக்குள் தங்களை ஈடுபடுத்தி கொலைச் செயலைச் செய்ய,

அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள் தங்களின் கடமைகளைத் துஷ்பிரயோகம் செய்து, ஏனையவர்களுக்கு மிகப் பெரும் அலைச்சல்களையும் மன உளைச்சல்களையும் ஏற்படுத்தி ஏதோவொரு வகையில் அவர்களைக் கொன்றுவிடுகின்றனர்.

ஆக, படியாதஅவர்கள்வாள்கொண்டுகொலை. படித்து அரச பதவி பெற்றவர்கள் தங்கள் பதவியைப் பயன்படுத்தி இப்படிக் கொல்கின்றனர்.

இவ்வாறாக எங்கும் அதர்மம், அநியாயம், அக்கிரமம் என்பதாக எங்கள் தமிழ்ச் சமூகத்தின் சமகால வாழ்வு அமைந்துள்ளது.

எனினும் இதுபற்றி கவலை கொள்ளவோ திருத்தியமைக்கவோ எந்த முயற்சிகளும் இல்லை எனும்போது நிலைமை இன்னும் மோசமாகும் என்பதே உண்மை.

# பனை மர அழகுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சி நிலையம் சாவகச்சேரியில் திறப்பு

பனை மர அழகு பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான பயிற்சி நிலையம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி சரசாலை தெற்கில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்தி சபை தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கரின் முயற்சியில் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இந்த பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பனை மரத்தில் இருந்து அழகான பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி இங்கு வழங்கப்படவுள்ளது. கடைசல் வேலைகள், பாத்திரம் தயாரித்தல், அழகுசாதனப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கிழமையில் 5 நாட்களிலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை குறித்த பயிற்சி நடைபெறவுள்ளது.

ஆண்கள் மட்டும் இந்த பயிற்சி நெறிக்குள் உள்வாங்கப்படவுள்ளதுடன் பயிற்சியின் போது 5000 ரூபாய் ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் எங்கு இருந்தாலும் இந்த பயிற்சி நிலையத்தில் வந்து பயிற்சியை பெறமுடியும். பயிற்சி பெற விரும்புகிறவர்கள் பனை அபிவிருத்தி சபை 021 222 2034 மற்றும் 077 362 0584 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகமாக காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வாகன தரிப்பிடத்தில் விடப்படும் மோட்டார் சைக்கிளை நாய்கள் சேதப்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வாகன தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் ஆசனத்தை கட்டாக்காலி நாய்கள் முழுமையாக சேதப்படுத்தியுள்ளது.

அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளே சேதமாக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம)

## மல்லாகம் துப்பாக்கிச் சூடு சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மல்லாகம் துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 12 சந்தேகநபர்களையும் எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அவர்களை ஆஜர்படுத்தியபோதே நீதவான் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தார்.

குறித்த இந்த 12 சந்தேகநபர்களும், மல்லாகம் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு காரணமாக அமைந்ததாக கூறப்படும் குழப்ப நிலைமையை தோற்றுவித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாபெரும் மலிவு விற்பனை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரையான வர்த்தக வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் மாபெரும் மலிவு விற்பனை நடைபெறும். (இ)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கோவிலாக் கண்டி திருமூல நாயகி சமேத திருமூலேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். எண்ணெய்க் காப்பு சாத்துதல் இன்று இடம் பெறும். (இ)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**குடும்பத்தில் அமைதி ஏற்பட என்ன செய்ய வேண்டும்?**

விதேஹி தேவி கல்யாணம்

விதேஹி பரமாம் ச்ரியம்

நுபம் தேஹி ஜயம் தேஹி

யசோ தேஹி த்விசோ ஜிஹி (108 முறை சொல்லவும்)

மகாவிஷ்ணுவின் அருள் பெற வழி செய்யும் விரதங்களில் ஒன்று சனிக்கிழமை விரதமாகும். சனிக்கிழமை ஒரு விசேஷமான நாள். மகாவிஷ்ணு, சனிபகவான், அனுமன் ஆகியோரை வழிபடுவதற்குரிய நாள்.

ஏழு சனிக்கிழமை தொடர்ந்து விரதமிருந்து மகாவிஷ்ணுவை வழிபட்டால் எமனையும் ஜெயிக்கலாம். சனிக்கிழமைகளில் துளசி இலைகளால் அனுமனையும் நீலோத்பல மலர்களால் சனி பகவானையும் அர்ச்சித்தால் குடும்பத்தில் நிம்மதி தவழும். *(தொடரும்)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருநது மாலை 6 மணி வரை **யாழ் பிரதேசத்தில** மட்டுவில், வாகையடி, கைதடி நுணாவில், கைதடி சந்தி, கைதடி கோப்பாய் வீதி, கைதடி வடக்கு, கைதடி கிழக்கு, நவபுரம், கள்ளிநகர், நாவற்குழி சந்தி, நாவற்குழி கேரதீவு வீதி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, கோகிலாக் கணடி, தனங்கிளப்பு, அறுகுவெளி, **Sanken construction,** கைதடி யுனைரட் மோட்டர்ஸ், கைதடி நுணாவில் நாராயணா ஹாட்வெயார், தாவடிப் பிள்ளையார் கோவிலடி, வன்னியசிங்கம் வீதி, தாவடி பாடசாலை லேன, பத்தானை, யுவசக்தி வீதி, அண்ணாமலை வீதி, சுதுமலை, மலைவேம்படி, சின்மய பாரதி பாடசாலை வீதி, மாப்பியன் வீதி, கூழாவடி, வலந்தலை, நடுத்தெரு, கசூரினா பீச், கருங்காலி, மருதபுரம், ஆலடி, சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** வட்டக்கச்சி, இராமநாதபுரம், **Aquaculture Development** வட்டக்கச்சி, இரணைமடு இலங்கை விமானபபடை முகாம் 1, இரணைமடு இலங்கை விமானப்படை முகாம் 2, வட்டக்கச்சி விவசாயப் பயிற்சி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தே தீரும்.
- பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தும் பிள்ளைகள் கடவுளையும் மகிழ்ச்சி அடையச் செய்கின்றனர்.
- மனஒருமையுடன் பணியாற்றுங்கள். ஆர்வத்துடன் ஈடுபட்டால் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.
- தவறை எண்ணி வருந்த வேண்டாம். நமக்கு வழிகாட்டும் தெய்வமாக இருப்பதால் தவறைப் பெரும்பேறாகக் கருதுங்கள்.
- அமைதி, மன்னிக்கும் பெருந்தன்மை, மனஉறுதி ஆகிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். வாழ்வில் வளரத் தொடங்குவீர்கள்.
- அடுத்தவர் கருத்தை கண்மூடித்தனமாக பின்பற்றாதீர்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள். அதே சமயத்தில் உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.
- விதையின் சக்தி தான் மரமாக வளர்கிறது. அதுபோல, ஒவ்வொருவரின் வாழ்வும் அவரவர் கொண்டிருக்கும் மன ஆற்றலைப் பொறுத்தே அமைகிறது.

# யா/இணுவில் மத்திய கல்லூரி
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## க.பொ.த (சா/த) பரீட்சை - 2017 உயர்பெறுபேறு


பா.கஜமுனி
8AS


சி.பிரவீனா
7A2B


க.சாறுக்கா
7A2B


சி.வைஸ்ணவி
5AB2CS


ம.நிரோஜன்
5AB2C

## க.பொ.த (உ/த) பரீட்சை - 2017

வர்த்தகப் பிரிவு


செல்வன் க.சுஜீவன்
A2B


செல்வி ச.கஜனி
ABC

2017ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் க.பொ.த சாதாரண பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் இன்று (30.06.2018) நடைபெறும் கல்லூரியின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்


கலைப்பிரிவு


செல்வி ஸ்ரீ.வானுகா
A2C


செல்வி வி.விஷ்ணுகா
2BC

## புலமைப்பரிசில் பரீட்சை


187
செ.செகராஜன்


176
தே.சுவர்ணாங்கி


168
கு.பாவலன்


164
ம.அகலினி


159
ப.தமிழ்க்கனி


158
இ.சுடர்நிலா

(4737)

# யாழ்ப்பாணம் மாநகர சபை.

## கடைகள், சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, மலசலகூட பராமரிப்பு என்பவற்றை பகிரங்க ஏலம் மூலம் குத்தகைக்கு வழங்கல் –2018

யாழ். மாநகர சபையால் 22.05.2018ம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாக, கீழ் குறிப்பிடப்பட்டவற்றை 01.07.2018 தொடக்கம் 31.12.2018 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கு வதற்கு 03.07.2018ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மாநகர சபை திட்டமிடல் பகுதி மண்டபத்தில் பகிரங்க ஏலம் கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

பகிரங்க ஏலத்தில் பங்குபெறுபவர் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருப்பதுடன் தங்கள் வதிவிடத்தை கிராம அலுவலர், பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதத்தையும் தே.அ.அட்டையையும் சமர்ப்பித்து கீழ்க்காட்டியதன் அடிப்படையில் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையை 03.07.2018 ம் திகதி காலை 9.30 க்குள் செலுத்தி பதிவு செய்ய வேண்டும். சித்தி பெறுபவர் குத்தகை, வாடகை பணத்தின் 2/3 பகுதியை (வரி உட்பட) 04.07.2018ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் செலுத்தி குத்தகை உடன்படிக்கை செய்ய வேண்டும்.

| தொ.இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 91,271.25 |
| 02. | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 10000.00 | 29,176.88 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 10000.00 | 104,139.00 |
| 04. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 400,396.50 |
| 05. | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 46,099.46 |
| 06. | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 157,106.25 |
| 07. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 395,533.69 |
| 08. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 10000.00 | 179,550.00 |
| 09. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 10000.00 | [illegible]9,600.00 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 10000.00 | 112,268.63 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 10000.00 | 112,218.75 |
| 12. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 10000.00 | 99,824.81 |
| 13. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 10000.00 | 110,872.13 |
| 14. | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 10000.00 | [illegible]3,066.25 |
| 15. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 10000.00 | 29,805.30 |
| 16. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 10000.00 | 5,756.82 |
| 17. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 282,536.89 |
| 18. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 35,959.88 |
| 19. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 10000.00 | 266,462.18 |
| 20. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 10000.00 | 202,367.81 |
| 21. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 10000.00 | 264,641.74 |
| 22. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 10000.00 | 203,789.25 |
| 23. | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10000.00 | 630,135.00 |
| 24. | பாசையூர் மீன்சந்தை | | 10000.00 | 161,096.25 |
| 25. | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 10000.00 | 32,767.88 |
| 26. | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | | 10000.00 | 76,383.27 |
| 27. | யாழ். கச்சேரியடி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | | 10000.00 | 165,754.58 |
| 28. | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 10000.00 | 119,700.00 |
| 29. | பொது மலசல கூடங்களை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 10000.00 | 74,812.50 |

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.
30.06.2018

இ.த.ஜெயசீலன், ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை

(சி-3070)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

## வெளிவாரிப் பரீட்சைகள் –2014

01. இசைமாணி / நடனமாணி-முதலாம் வருடத்தேர்வு (இறுதிச்சந்தர்ப்பம்)
02. இசைமாணி / நடனமாணி-இரண்டாம்வருடத்தேர்வு
03. இசைமாணி / நடனமாணி-மூன்றாம் வருடத் தேர்வு
04. இசைமாணி / நடனமாணி-நான்காம் வருடத்தேர்வு

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில்நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் [illegible] பாணப்பல்கலைக்கழகத்தில் இயங்கும் [illegible] யில்,விண்ணப்ப கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்ட[illegible] லுத்தியமைக்கான பற்றுச்சீட்டை யாழ்.பல்கலைக்[illegible] மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்[illegible] ப்பித்து விண்ணப்பபடிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பபடிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர்,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/–க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/– பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 செ.மீX20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பபடிவங்களை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளவதற்கான இறுதித்திகதி 13.07.2018 (வெள்ளிக்கிழமை )ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளிலும் மேற்படி இணையத்தள முகவரியிலும் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
26.06.2018

(சி-3069)

## விபத்துக்குள்ளான...

சாலையில் உயிரிழந்துள்ளார்.

காரைநகர் களபூமியை சேரந்த சங்கரப்பிள்ளை கௌசிகன் (வயது 27) என்ற இளைஞரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் கடந்த 10ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு வீட்டின் அருகில் உள்ள கோவிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு வீடுதிரும்பியுள்ளார்.

வரும் வழியில் வீதியில் பள்ளத்தினுள் மோட்டார் சைக்கிள் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் அவ்விடத்திலேயே படுகாயமடைந்து மயக்கமடைந்துள்ளார்.

அதிகாலை என்பதால் குறித்த வீதியால் சனநடமாட்டம் அந்த ரேம் இருக்கவில்லை. எனவே குறித்த இளைஞர் 5 மணித்தியாலங்கள் வரை அந்த இடத்தில் உயிருக்கு போராடியபடி இருந்துள்ளார்.

காலை 7 மணியளவில் அவ்வழியால் போன ஒருவர் இவரை கண்டு யாழ்.வைத்தியசாலையில் கொண்டு வந்து சேர்ப்பித்தார். அன்றைய தினம் மாலை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் நேற்று காலை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண் டிருந்தார். (ம-9)

## ஆதரவு கிடைக்க...

மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டும் என்பதுடன் தமது பிரதேசத்தில் போதைப் பாவனையை ஒழிப்பதற்கு உடனடியாக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என் கோரி அப்பகுதி மக்களால் போராட்டம் கடந்த இரு நாட்களாக முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் நேற்றைய தினம் பகுதிநேர கடையடைப்பு மற்றும் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளுமாறும் அனைத்து தரப்பினரிடமும் காட்டுப்புலம் கிராம அபிவிருத்தி சங்கத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் நேற்று பேருந்து சேவைகள், வர்த்தக நடவடிக்கைகள், பாடசாலை செயற்பாடு, பொதுச் செயற்பாடுகள் என அனைத்து நடவடிக்கைகளும் வழமைபோல் நடைபெற்றன.

மாணவியின் படுகொலைக்கு நீதி கோரும போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க தமிழ் சமூகம் முன்வராமல் இருந்தது வேதனை அளிப்பதாக காட்டுப்புலம் மக்கள் கவலை வெளியிட்டிருந்தனர். குறித்த விடயம் தொடர்பாக ஒழுங்கு முறையான ஏற்பாடுகள், அறிவித்தல்கள் எவையும் தரப்படவில்லை என பேருந்து சேவை மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்திருந்தனர். (ம-9)

## தமிழீழ வரைபடத்துடன்...

நடைபெற்றது. இதன்போது ஆலயத்தின் இந்து இளைஞர் மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில் குறித்த பூங்காவன திருவிழா நடைபெற்றது.

மேற்படி திருவிழாவின் வெளி வீதியில் அம்பாள் ஊர்வலம்வந்த போது தமிழீழ [illegible]தில் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் [illegible]தார். மிகப்பெரிய தமிழீழ வரைபட[illegible]பாள் ஊர்வலம் வந்தமையால் ஆயி[illegible]கான மக்கள் திரண்டிருந்தனர்.(ம-4)

## ஜனாதிபதி இதய...

நெற்களை களஞ்சியப்படுத்தி எம்மவர்களின் உழைப்பிற்கேற்ப அவர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கு ஏற்றவகையிலான களஞ்சிய அறை காயவைக்கின்ற தளம் அமைக்கப்பட்டிருப்பது என்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது.

பொலநறுவையில் பொசன் நிகழ்வில் கலந்து கொள்ள சென்ற ஜனாதிபதி அங்குள்ள சிங்கள மக்களுடன் மேலைத்தேய அரச தலைவர்கள் போன்று எளிமையாக நடந்து கொள்கிறார். ஆனால் நம்பி வாக்களித்த எம் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். எமது மக்கள் எல்லாவற்றிற்கும் தெருவில் இருந்து போராடவேண்டிய நிலை காணாமல்போனோர்களினுடைய உறவினர்கள் கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பித்து எதிர்வரும் 1ஆம் திகதி 500 நாட்களை கடக்கவுள்ளனர். இவர்களுக்கான முடிவு இன்றி தொடர்கிறது எம் தாய்மார்களின் போராட்டம். மறுபுறத்தில் காணி மீட்பிற்காய் போராடிக் கொண்டு இருக்கிறோம். அரசியல்கைதிகளும் விடிவிற்காய் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே புரையோடிப்போயிருக்கிற இனப் பிரச்சினை தொடர்பிலும் எவ்வித அக்கறையுடனும் அரச தலைவர் செயற்படவில்லை சிங்கள மக்களிடம் மேலைத்தேய அரசியல்வாதிகள் போன்றும் எளிமையானவர் போன்றும் காட்டிக்கொள்ளும் தமிழர்களாகிய எம் முன் இருக்கின்ற பிரச்சினைகளை தீர்க்க இதயசுத்தியுடன் செயற்படத்தயாரா? எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (ம)

## காணாமல் ஆக்க...

நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ம-9)

## 9 பிள்ளைகளுடன்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலம்பவெவ பகுதியில் மகாவலி அதிகார சபையின் பக்கச்சார்பான திட்டமிட்ட நடவடிக்கை மூலம் தாம் பழிவாங்கப்படுவதாக தனது 9 பிள்ளைகள் சகிதம் ஒரு குடும்பத்தினர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

தாம் கடை ஒன்றை அமைக்க முற்பட்டதை தடுத்து நிறுத்தி குறித்த இடத்தை யானை வேலி அமைத்து அபகரித்து தனக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் இதற்கு தீர்வு இல்லையேல் தான் குறித்த இடத்திலேயே செத்தாலும் தான் போராட்டத்தை கைவிட மாட்டேன் எனவும் தனக்கான நீதி பெற்று தரப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு தனக்கு தீர்வு தராது தன்னை [illegible] தான் மருந்து அருந்தி பிள்ளைகளுக்கும் மருந்தை குடுத்து குடும்பமாக உயிரை மாய்ப்போம் எனவும் அல்லது தீமூட்டி எரிந்து போவோம் என பெற்றோர் மாரும் நஞ்சு மருந்துடன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ம-281)

# றெஜினாவின் படுகொலைக்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்

## ஆளுநர் கூரே தெரிவிப்பு

(கரணவாய்)

புங்குடுதீவில் வித்தியா, சுழிபுரத்தில் றெஜினா போன்ற பெண் குழந்தைகளின் காட்டுமிராண்டித்தனமான கொலைகள் இனியும் நடைபெறாது தடுப்பதற்கு அரசியல் தலைமைகள், பொது அமைப்புகள், மதத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என சமூக அக்கறை கொண்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுப்பதாக ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் 180 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் பரிசளிப்பு விழா நிகழ்வும் நேற்று காலை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

வீண் உணர்ச்சி பேச்சுக்கள், கிளர்ச்சிகளினால் இவ்வாறான செயல்களை தடுத்து நிறுத்தி விடமுடியாது. இவை ஏன் நடைபெறுகின்றன என்பதன் பின்னணிகளை நன்கு விசாரித்து அறிந்து கொள்வது அவசியமானது.

இந்த நிகழ்வில் நான் கலந்து கொண்டிருக்கின்றபோதும் முழு நாட்டினையும் சோகத்தில் ஆற்றிய சம்பவம் றெஜினாவின் படுகொலை என நான் நினைக்கின்றேன். பெரியவர்களின் சண்டையில் பழியை தீர்த்துக் கொள்வதற்காக ஒன்றும் அறியாத சின்னக் குழந்தை படுகொலை செய்யப்பட்டிருக்கின்றது. இது மிகவும் கொடூரமான சம்பவம். இதற்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் உயர்ந்த பாடசாலை ஒன்றின் பரிசளிப்பு விழாநிகழ்வில் கலந்து கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது. பொறியியலாளர்களை, மருத்துவர்களை, விரிவுரையாளர்களை என பலதரப்பட்டவர்களை உயர் நிலை வகிப்பவர்களை உருவாக்கிய பாடசாலை வேம்படி மகளிர் கல்லூரி. கொழும்பில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இப்பாடசாலைகளில் படித்த ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். அது பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதாக தெரிவித்தார். (ம-60)

## கீழே விழுந்ததில் 2 பேர் உயிரிழப்பு

கொழும்பு அநாகரிக தர்மபால மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அடுக்குமாடிக் கட்டடத்தின் 4 ஆவது மாடியில், வேலை செய்து கொண்டிருந்த 2 பேர் நேற்று அதிலிருந்து விழுந்து மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பதுளை மற்றும் பிபிலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 45 வயது மற்றும் 39 வயதுடைய 2 பேரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெஹிவளைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## மேன்முறையீடு குறித்து...

எதிரான மேன்முறையீடு குறித்து தீர்மானிக்கப்படும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்று (நேற்று) மாலை வரை வழக்கு தீர்ப்பின் முழுமையான விபரங்கள் முதலமைச்சருக்கு கிடைக்கவில்லை. இந்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி கனகஈஸ்வரன் தற்போது வெளிநாடொன்றில் தங்கியிருக்கிறார்.

அடுத்த சில தினங்களில் அவர் நாடு திரும்பிய பின்னர், சட்ட ஆலோசனைகளின் பின்னரே என்ன முடிவெடுப்பது என்பதை உறுதியாக தீர்மானிக்க முடியுமென்றார் முதலமைச்சர். எனினும், இந்த இடைக்கால தடைக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாமென்ற முடிவை கொள்கையளவில் தாம் எடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று மாலை வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் கூரே, தொலைபேசி மூலம் டெனீஸ்வரனை தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார். (ம)

## சமையல்...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 1,676 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வந்த 12.5 கிலோகிராம சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1,538 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் சமையல் எரிவாயு விலை 55 ரூபாயாலும், 2.3 கிலோ கிராம் 25 ரூபாயாலும் குறைவடைகின்றது. வாழ்க்கைச் செலவு குழுவினால் எடுக்கப்பட்ட [illegible] அதிகார [illegible] அறிவித்துள்ளது. (ம)


# கண்ணீர் அஞ்சலி

திருமதி
மன்னர் அன்ரனி
செபமாலையம்மா



எமது பாடசாலை ஆசிரியை திருமதி றீற்றா எசார்வே அவர்களின் அன்புத் தாயார் திருமதி மன்னர் அன்ரனி செபமாலையம்மா அவர்கள் 27.06.2018 அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4729)

கல்லூரிச் சமூகம்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

ஓய்விலும் உயர வாழ்த்துகின்றோம்...

வட பகுதியின் முதலாவது
மீள்சுழட்சி காகித உற்பத்தி தொழிற்சாலையை
ஆரம்பிக்கும் எமது முயற்சிக்கு எம்மவர் மத்தியில்
இருந்த அவநம்பிக்கைகளுக்கு அப்பால்
உறுதியான நம்பிக்கையூட்டி,
ஊக்கமளித்து உதவிக்கரம் நீட்டி
சாதிக்கத் துணைநின்று

பணியிலிருந்து ஓய்வு பெறும்
மக்கள் வங்கி
யாழ் பிராந்திய முகாமையாளர்
திரு. சுசீந்திரன் அவர்களை
வாழ்த்துவதில் மனநிறைவடைவதுடன்
அவரது ஓய்வுக்காலம் சிறக்க
பிரார்த்திக்கிறோம்.
– உரிமையாளர்களும், பணியாளர்களும்





(க.3072)

NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited
Industrial Estate, Atchuvely, Jaffna, Sri Lanka, Tel : 021 221 3000, E.mail : nobel_ipl@yahoo.com

## மயக்கமடைந்து...

ளின் தந்தை ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் வடக்கில் வசிக்கும் கிருஸ்ணன் சிவராசா (வயது 58) என்ற குடும்பஸ்தரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கூலித்தொழில் செய்து வருகிறார். இவருக்கு ஏழு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருக்கின்றனர். கடந்த 23 ஆம் திகதி காலை கூலி வேலை தேடி வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு சென்றுள்ளார். எங்கு தேடியும் வேலை கிடைக்காத காரணத்தினால் காலை 11 மணியளவில் வீட்டுக்கு திரும்பி சென்றுள்ளார்.

செல்லும் வழியில் வெயில் கடுமையாக இருந்த காரணத்தினால் தலை சுற்றி எதிரே இருந்த மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார். அதில் மரத்துடன் மோதுண்டு தலையில் பலமாக அடிபட்டத்தில் மயக்கமடைந்துள்ளார்

உடனடியாக இவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று காலை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார் இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## சர்வதேசத்தை...

வில் நடைபெற்று வரும் அமர்வுகளில் தமது பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ள நிலையில் உறவுகள் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்

இந்நிலையில் கிளிநொச்சியில் உறவுகள் 498-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் நாளை ஞாயிற்றுகிழமை தமது 500-வது நாளில் தமது பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறியமுடிகிறது. (ம-281)

## மேலும் இருவர்...

மேலும் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

சுழிபுரம் காட்டுபுலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிவனேஸ்வரன் ரெஜினா (வயது6) என்ற சிறுமி அப்பகுதி தோட்டக் கிணற்றிலிருந்து கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவத்தையடுத்து சிறுமியின் உறவினர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நால்வர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் இருவர் பின்னர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் குற்றத்தை ஏற்றுக் கொண்டு வாக்குமூலம் வழங்கிய பிரதான சந்தேகநபர். மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஏனைய சந்தேகநபர்கள் ஐந்து பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரும் இன்று மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## மீண்டும் அமைச்...

வழங்கியுள்ளனர்.

எனினும், வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்த தீர்மானத்துக்கு தடையுத்தரவு பிறப்பித்த நீதிமன்றம் வழக்கை எதிர்வரும் ஜுலை மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்நிலையில், அரசியல் சாசனத்தின்படி மாகாண அமைச்சர் ஒருவரைப் பதவி நீக்கும் அதிகாரம் மாகாண ஆளுநருக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக டெனீஸ்வரன் தனது மனுவில் கூறியிருந்தார்.

எனவே தன்னை பதவி நீக்குவதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எந்த அதிகாரமும் இல்லை என அவரது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தான் வகித்த அமைச்சுப் பதவியைத் தற்போது வகிக்கும் அமைச்சர்களையும் அதிலிருந்து விலகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாக டெனீஸ்வரன் கருத்துத் தெரிவித்ததுடன், இந்த தீர்ப்பின் ஊடாக நியாயம் நிலை நாட்டப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வட மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்திய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் டெனீஸ்வரன் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், டெனீஸ்வரன் வகித்த பதவிகளைத் தற்போது வட மாகாண முதலமைச்சருடன் சேர்ந்து அனந்தி சசிதரன் மற்றும் சிவநேசன் ஆகியோர் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


**Win repair**

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 0779648942

**கலைஞர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டம்**

சிறந்த குரல் வளமுடைய மேடை அனுபவம் இல்லாத பாடகர்கள்/பாடகிகள் இசைக்கருவி விற்பன்னர்களை ஊக்குவிக்கும் வகையில் எமது நிறுவனம் ஒரு செயற்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளது.

தொடர்பு இல:- 076 554 1472

தீபம் இன்ஸ்டிட்யூட், திருநெல்வேலி.

**வீடு வாடகைக்கு**

இராசாவின் தோட்டம் TCT முன்பாக ஐந்து அறைகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 515 1352

**வீடு விற்பனைக்கு**

கனகரட்ணம் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தில் 5 அறைகள், 2 Halls, 3 குளியலறைகள், வராண்டாவுடனான (1 அறை, 2 -Halls மாபிள்கள் பதிக்கப்பட்டுள்ளன.) விசாலமான வீடு காணியுடன் விற்பனைக்கு உண்டு.

(4724) தொடர்புகளுக்கு

071 427 4690, 076 937 2889

**45,000 - 80,000/- வரை**

சம்பளத்துடன் சவுதி அல் மராய் நிறுவனத்தில் உடனடி

**வேலைவாய்ப்புக்கள்**

மெக்கானிக், A/C, குளிர்சாதனப்பெட்டி டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், விற்பனை உதவியாளர், பெயின்ரர், காப்பென்ரர், சாரதிகள், தொழிலாளர்

0777 324 004

ஜுலை மாதம் பயண ஏற்பாடு

SIKARAM ACADEMY

221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் 021 - 222 00 11 www.sikaram.lk

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd. 90, First Floor, Chatham Street, Colombo 1 www.tgl.lk

**இந்து நாகரிகம் –2018**

**இறுதிக் கருத்தரங்கு**

**D.C.M -யாழ்நகர்**

வளவாளர்கள்:-

T.ஸ்ரீஸ் B.A, (Hons) (யாழ் பிரபல ஆசிரியர்)

M.M.ரதன் B.A, (Hons) (வவுனியா, கொழும்பு பிரபல ஆசிரியர்)

காலம்:- 02.07.2018, காலை: 09.30

இந்து நாகரிகம்

- 250 -M.C.Q (வினாக்கள்) -பகுதி I
- எதிர்பார்க்கை வினாக்கள் -பகுதி II
- வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.

-நிர்வாகி (4718)

**Personal, Group Classes**

இரசாயனவியல் (A/L) 2018, 2019,2020, Repeat Batch Past Papers செய்விக்கப்படும்.

சி.அங்கதன் (B.Sc.[Spl. in chem])

தொடர்பு:- 077 920 8945

**வேலையாள் தேவை**

புத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீகௌதமன் ஹாட்வெயாருக்கு வாகனசாரதி தேவை.

தொடர்புகளுக்கு:- 077 691 1089

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELs

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

070 330 5500

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 838 9398

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம் கரணவாய் -மீசாலை-கிளிநொச்சி-கனகராயன்குளம் முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா-திருகோணமலை

**Advance in Auto CAD**

Personal–Group–Visiting Classes

CAD Designers 2D&3D

Exceeding Expectations

University of Peradeniya

University of Moratuwa

071-8617972 077-5116320

**SB TRAVELS AND TOURS**

நேரடி முகவர்

தற்போது இந்தியா சென்று வருவதற்கான விமானப் பயணச்சீட்டுக்களை 19,500/= இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம் (இடைத்தரகர்கள் தேவையில்லை. எமது நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.)

இந்திய வீசா விண்ணப்பப்படிவம் மற்றும் வீசாவிற்கான போட்டோ 300/= மட்டுமே

மிகக்குறைந்த விலையில் அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்கள்

No.160, Temple Road, Nallur, Jaffna.

No.212, Kasthuriyar Veethy, Jaffna.

021 222 8555, 222 9555, 021 222 7666


## மரண அறிவித்தல்



### கனகேந்திரன் வாலபூரணி (அன்னம்)

விழுபனை கண்ணகை அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் ஒட்டுவெளி மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகேந்திரன் வாலபூரணி நேற்று (29.06.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகேந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசு செல்லம்மாவின் கனிஷ்ட புத்திரியும், சுந்தையா (விடி சுந்தையா ஆசிரியர்) அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், மைதிலி, பிரதீபன் ஆகியோரின் ஆருயிர் தாயாரும், கௌரிகாந்தன், நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரதாங்கியின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர் களான குமாரசாமி (பீரங்கி), சரஸ்வதி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமுதினி, அமுதினி, குணாளன் ஆகியோரின் சிறிய தாயாரும், கமலதாசன், புஸ்பராசா, இராசகோபிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்சன், லதுஜா, மிதுளா, மதுசன், மிதுனன், குசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கனகபூமணி, கனகராசா, கனகபூவதி, கனகசோதி, கனகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் படித்த மகளிர் திட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஒட்டுவெளி, மிருசுவில். (R-3073) குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.